# போக்குவரத்துத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு

2020–2021

மானியக் கோரிக்கை எண். 48


**எம்.ஆர். விஜயபாஸ்கர்**

போக்குவரத்துத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2020

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | அரசுப் போக்குவரத்துக் கழங்களின் ஒரு பார்வை | 8 |
| 3 | சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் | 35 |
| 4 | பொதுமக்களின் சேவைகளை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் | 43 |
| 5 | பயணக் கட்டணச் சலுகை | 49 |
| 6 | வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள் | 55 |
| 7 | பணியாளர்களின் நலன்களுக்கான நடவடிக்கைகள் | 57 |
| 8 | துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு | 65 |
| 9 | அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் | 78 |
| 10 | தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை | 106 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 11 | பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு | 113 |
| 12 | சாலை போக்குவரத்து நிறுவனம் | 115 |
| 13 | சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவு | 121 |
| 14 | பயிற்சி பிரிவு | 125 |
| 15 | தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 131 |
| 16 | முடிவுரை | 137 |

# போக்குவரத்துத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2020–2021

## அத்தியாயம்–1

### முன்னுரை

**1.1** மனித வாழ்க்கைக்கு உணவும் உறைவிடமும் போன்று போக்குவரத்தும் அடிப்படையானது. எனவே மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பல்வேறு வகையான போக்குவரத்து வசதிகளை விரும்புகின்றனர். உயர்ந்த மற்றும் சமத்துவமான சமூகங்கள், திறமையான மற்றும் குறைந்த கட்டணங்களை கொண்ட போக்குவரத்து அமைப்புகளை கொண்டுள்ளன. பொருளாதார வளர்ச்சி மற்றும் இணக்கமான சமூக தொடர்புகளுக்கு நன்கு ஒருங்கிணைந்த மற்றும் விரிவுபடுத்தப்பட்ட பொதுப் போக்குவரத்து அமைப்புகள் அவசியமாகும்.

மாநிலத்தின் நகர்புற வளர்ச்சிக்கும், நிதி முன்னேற்றத்திற்கும் முதுகெலும்பாக திகழ்வது சிறந்த போக்குவரத்து முறையே ஆகும். இது மக்கள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்கு மட்டுமல்ல சமுதாயத்தின் உயர்வுக்கும் பொறுப்பாகும். இவ்வகையில், தமிழக அரசின் போக்குவரத்துத் துறை, திறமையான, குறைந்த கட்டணங்கள், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதுப் போக்குவரத்து

அமைப்பின் மூலம் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்தினை மேம்படுத்திட பாடுபட்டு வருகின்றது. இந்தியாவிலேயே மிகவும் வளர்ச்சி அடைந்த மாநிலங்களுள் ஒன்றாக விளங்கும் தமிழகம், குறைந்த கட்டணத்தில், மிகவும் சிறந்த முறையில் செயல்படும் பொது போக்குவரத்து முறை மூலம் மாநிலம் முழுவதையும் இணைக்கும் வகையில் ஒரு முன்னணி மாநிலமாக திகழ்கின்றது. மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் பேருந்து சேவை கிடைப்பதை உறுதி செய்துள்ளது.

## 1.2 தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்துத் துறையின் நிலை

இந்தியாவில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களுள் தமிழக அரசின் போக்குவரத்துத் துறை முதன்மையானதாகும். அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் தினமும் சுமார் 1.7 கோடி மக்கள் பயணம் செய்கின்றனர். இந்திய நகரங்களில் இயக்கப்படும் பொது போக்குவரத்துப் பேருந்துகளில் 60% மேல் தென்னிந்தியாவிலும் அதில் கணிசமான பங்கு தமிழ்நாட்டில் இயக்கப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிக அளவில் பயன்பாட்டில் உள்ள போக்குவரத்து மற்றும் இணைவமைப்புடன் கூடிய குறைந்த கட்டணங்களை கொண்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுகின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான பேருந்துகளை இயக்கி வருகின்றன. இத்துடன், அதிக எண்ணிக்கையிலான இரயில் வழித்தடம் மற்றும்

விமான நிலையங்களுடன் சேர்த்து உலகின் மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புப் பகுதியாக தமிழ்நாடு விளங்குகின்றது.

## 1.3 தனிநபர் போக்குவரத்துப் பெருக்கத்தால் ஏற்பட்டுள்ள சவால்

மனித மேம்பாட்டு குறியீட்டு அட்டவணைகளில், பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு முதன்மையாக விளங்குகின்றது. மேலும், தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் பிற மாநிலங்களை விட அதிகமாகும். இந்த உயர் தனி நபர் வருமானம், தனியார் கார் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதல் 5 மாநிலங்களில் ஒன்றாகவும், அதிக எண்ணிக்கையிலான இரு சக்கர வாகனங்கள் கொண்ட மாநிலமாகவும் மாறுவதற்கு வழிவகுத்துள்ளது. இந்த பொருளாதார வளர்ச்சி, பொது போக்குவரத்தில் இருந்து தனியார் வாகனங்களுக்கு அதிக அளவில் இடம்பெயர்தலின் விளைவாக நகரங்களில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. சென்னையில் 2008 முதல் 2018 வரை, மொத்த மோட்டார் வாகன எண்ணிக்கை 1,00,69,010–லிருந்து 2,56,61,847 ஆக அதிகரித்துள்ளது. அதே காலகட்டத்தில் பேருந்து பயணிகளின் பங்கானது 26% முதல் 22.6% வரை குறைந்துள்ளது.

## 1.4 நோக்கங்கள்

மாநிலத்திலுள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த, நம்பகமான மற்றும் எளிதில் அணுகக்கூடிய போக்குவரத்து முறையை ஏற்படுத்த போக்குவரத்துத் துறை உறுதி பூண்டுள்ளது. தமிழக அரசின் தொலை நோக்கு 2023 திட்டத்தில் வரையறுக்கப்பட்ட, பொது போக்குவரத்தின் இலக்கினை அடைய இத்துறை முயற்சி மேற்கொண்டுள்ளது. இவ்வகையில், போக்குவரத்துத் துறை கொள்கைகளையும், திட்டங்களையும் மற்றும் பிற துறைகளுக்கான ஒத்துழைப்பையும் தொடர்ந்து வழங்கி வருகின்றன. மேலும், போக்குவரத்துத்துறை, 8 அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து, புதிய யுத்திகளை வகுத்து செயல்பட்டு வருகிறது. இதனால் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமின்றி, ஒட்டுமொத்த பொதுப் போக்குவரத்தின் பயண அனுபவத்தையும் மேம்படுத்தலாம்.

போக்குவரத்துத் துறை கீழ்க்கண்ட பரந்த நோக்கங்களைக் கொண்டு செயல்படுகின்றது

1. தொலை நோக்கு பார்வையை செயல்படுத்துவதே போக்குவரத்துத்துறையின் கொள்கையாகும்.

2. பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கு நிதி உதவியளித்தல் மற்றும் அவற்றை இயக்க தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த, நம்பகமான மற்றும் திறமையான போக்குவரத்து வசதியை ஏற்படுத்துதல்.

3. பல்வேறு வகையான போக்குவரத்துகளின் இணைப்பினை மேம்படுத்துதல்.

4. நம்பகத்தன்மை, பாதுகாப்பு, பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் பயணிகளின் தகவல் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் போக்குவரத்து செயல்பாட்டினை மேம்படுத்துதல்.

## 1.5 போக்குவரத்து துறையின் நிறுவன அமைப்பு

போக்குவரத்துத் துறை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் முதன்மைச் செயலர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இத்துறையில் ஒரு இணைச் செயலாளர், ஒரு துணைச் செயலாளர், 4 சார்புச் செயலாளர்கள் என 79 நிர்வாகப் பணியாளர்கள் உள்ளனர். மேலும் தலைவர் அலுவலகத்தில் ஓர் அலுவலர் மற்றும் 6 பணியாளர்கள் உள்ளனர்.

போக்குவரத்துத் துறை கீழ்க்கண்ட அமைப்புகளை நிர்வகித்து வருகின்றது.



போக்குவரத்துத் துறையின் முதன்மைச் செயலாளர், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் அலுவல் வழித் தலைவராகவும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராகவும் செயல்படுகிறார்.

# அத்தியாயம்–2

## அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒரு பார்வை

**2.1** திறமையான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தை வழங்குவது போக்குவரத்துத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின் முக்கிய குறிக்கோளாகும். **8** அரசு போக்குவரத்துக் கழகங்கள் மாநகர, நகர, புறநகர், விரைவு மற்றும் மலைப் பகுதி போன்ற பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றன. தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ரயில்வே மற்றும் விமான நிலைய திட்டங்கள் தொடர்பாக மாநில அரசின் ஒருங்கிணைப்பு முகமையாக போக்குவரத்துத் துறை உள்ளது.

### 2.2 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக வரலாறு

பொது போக்குவரத்துத்துறையின் நிலையினை ஆராய்வதற்கு ஆங்கிலேய அரசால் 1944-ஆம் ஆண்டில் ஒரு குழு அமைக்கப்பட்டது. பொது போக்குவரத்துத் துறையானது தனியார்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால் சேவை நோக்கமின்றி, இலாப நோக்கில் இயங்கியதால் போக்குவரத்தினை தேசியமயமாக்க மேற்படி குழு பரிந்துரைத்தது. அதனடிப்படையில், சென்னை மாகாணத்தில் இயக்கப்பட்ட **239** தனியார் பேருந்துகள் **24.03.1947** அன்று தேசியமயமாக்கப்பட்டன. மாநிலங்கள் சீரமைக்கப்பட்டதை அடுத்து, “அரசு பேருந்து சேவை” என்பது “மாநில போக்குவரத்துத்துறை” என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தன்னாட்சி அமைப்பாக செயல்பட்டு, திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக அரசு போக்குவரத்துத்துறை, பொதுத்துறை நிறுவனமாக மாற்றப்பட்டது. அதனடிப்படையில், சென்னை மற்றும் செங்கல்பட்டில் இயங்கி வந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிருவாகம், கம்பெனிகள் சட்டம் **1956**-இன் கீழ் கொண்டு வரப்பட்டு, பல்லவன் போக்குவரத்துக் கழகம் என பெயரிடப்பட்டது. இதுவே பிற போக்குவரத்துக் கழகங்கள் உருவாக வழி வகுத்தது.

## 2.3 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நோக்கங்கள்

பயனாளிகளுக்கு ஏதுவான, குறைந்த கட்டணம், திறமையான, சமநிலைப்புத்தன்மையுடைய, பொருளாதார சாத்தியமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்து போக்குவரத்தினை உருவாக்கிட தமிழக அரசின் போக்குவரத்துத் துறை முன்மொழிந்துள்ளது. பயணிகளின் இருப்பிடம், வேலை செய்யும் இடம் மற்றும் வர்த்தக அமைப்பு ஆகியவற்றிற்கு பேருந்து சேவைகள் சென்றடைவதற்கு இத்துறை முயன்று வருகின்றது.

## 2.4 ஒரு நீடித்த பொதுப் போக்குவரத்து முறைக்கான தேவையான கொள்கைகள்

சுயச்சார்புடைய பேருந்து போக்குவரத்தினை ஏற்படுத்துவதன் வாயிலாக பயணிகள் அனைத்து பகுதிகளுக்கும் செல்வதற்கு தடையற்ற இணைப்பு மற்றும் சிறந்த பயண அனுபவத்தை தருவதே அரசின் நோக்கங்களாகும். பேருந்துகள் சரியான நேரத்தில் இயக்குவதன் மூலம் பயண நேரங்களை

குறைத்தல், அதிகப்படியான பகுதிகளுக்கு பேருந்து சேவைகளை வழங்குதல் மற்றும் கடைக்கோடி பகுதிகளுக்கும் பேருந்து சேவை அளித்தல் ஆகியவை பொது போக்குவரத்து துறையிலுள்ள சவால்களாகும். அதிக போக்குவரத்து இணைப்பு மற்றும் பல்வகை போக்குவரத்தினை வழங்குதல், பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிய பேருந்துகளை இயக்குவதின் மூலம் அதிக பாதுகாப்பு மற்றும் சிறந்த பயண வசதிகளை ஏற்படுத்தித் தருதல், தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை மேம்படுத்துவதன் மூலம் மேற்கண்ட நோக்கங்களை அடைந்திட முடியும். தற்போதுள்ள, வழித்தடங்களை கணக்கிடுதல் மற்றும் கடைக்கோடி வரையுள்ள பகுதிகளுக்கு போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தி தருவதும் அரசின் நோக்கங்களில் ஒன்றாகும். மோட்டார் வாகன போக்குவரத்து அல்லாத போக்குவரத்தை ஊக்குவித்தலும், தனிநபர் போக்குவரத்தினை குறைத்தலும், நகரங்களில் பொது போக்குவரத்தின் பங்கினை உயர்த்துவதும் அரசின் நோக்கங்களாகும். பொதுப் போக்குவரத்தில் குறிப்பாக பேருந்து சேவைகளில் நம்பகத்தன்மை மற்றும் வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் இவற்றினை அடைய அரசு உத்தேசித்துள்ளது. கடைக்கோடியிலுள்ள பகுதிகளுக்கு போக்குவரத்து இணைப்பினை மேம்படுத்துதல், பயனாளிகளுக்கு ஏதுவான தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் பேருந்து சேவைகளை உயர்த்திடவும், சிறந்த பயண அனுபவத்தை பெற்றிடவும் முடியும்.

பொது போக்குவரத்து உள்கட்டமைப்பில் அதிக அளவிலான முதலீட்டின் தேவையினை அரசு உணர்ந்துள்ளதால் சாலைகளை மேம்படுத்துதல், சிறந்த பேருந்துகளை கொள்முதல் செய்தல், உருவாக்குதல், நடைபாதை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு துறைகளில் கணிசமான அளவு முதலீடுகள் செய்துள்ளது. பொது போக்குவரத்தை மேம்படுத்திடவும் அதற்கான நிதியினை பெற்றிடவும் உலக வங்கி, ஜப்பான் சர்வதேச ஒருங்கிணைப்பு முகமை (JICA) மற்றும் ஜெர்மன் நிதி நிறுவனம் (KfW) போன்ற பன்னாட்டு முகமைகளுடன் அரசு இணைந்து செயல்படுகிறது. சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் குறைக்கவும், பருவநிலை மாற்றத்திற்கு எதிராக பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மக்களுக்கு ஏற்படும் சுகாதார சீர்கேட்டினை குறைத்திடவும், மின்சாரப் பேருந்துகளை அறிமுகம் செய்தல் போன்ற பசுமை முயற்சிகள் அரசின் முன்னுரிமையாகவும் உள்ளது.

## 2.5 அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள்

தமிழக அரசின் போக்குவரத்துத் துறை, பொதுப் போக்குவரத்தில் முன்னணித் துறையாக விளங்குகின்றது. தமிழ்நாடு அரசின் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள், மாநிலத்தின் ஒவ்வொரு கிராமங்களுக்கு போக்குவரத்து வசதியும், நகர்ப்புறங்களிலுள்ள அனைத்து பகுதிகளையும் இணைத்து, அண்டை மாநிலங்களுக்கும் மற்றும் மாவட்டங்களுக்கிடையேயும் அதிகப்படியான இணைப்புகளை வழங்குகின்றன. அரசு

போக்குவரத்துக் கழகங்களில் நாளொன்றுக்கு 1.64 கோடி மக்கள் பயணம் செய்கின்றனர். இந்தியாவிலேயே அதிக அளவில் பேருந்து பயன்பாடு மற்றும் மிகச்சிறந்த சேவையுடன் கூடிய குறைந்த கட்டணங்களை தமிழ்நாட்டில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் கொண்டுள்ளன.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் 31.01.2020 அன்றுள்ளவாறு 1,448 உபரி பேருந்துகள் உள்பட 20,944 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 31.01.2020 அன்றுள்ளவாறு வரையறுக்கப்பட்ட பேருந்து சேவைகளின் எண்ணிக்கை 19,496 ஆகும். அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் நாளொன்றுக்கு சராசரியாக 84.07 இலட்சம் கி.மீ. தூரத்திற்கு பேருந்துகளை இயக்குகின்றன. 31.01.2020 அன்றுள்ளவாறு, பதிலி பணியாளர்களையும் சேர்த்து மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 1,26,089 ஆகும். அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால், செயல்பாட்டுத்திறன் குறியீடுகள் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளன. மார்ச் 2011–ல், ஒரு லிட்டருக்கு 5.25 கிலோ மீட்டராக இருந்த எரிபொருள் இயக்கத்திறன், ஜனவரி 2020–இல், ஒரு லிட்டருக்கு 5.33 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஒன்றுக்கு ஓடிய தூரம் மார்ச் 2011–இல் 1.65 லட்சம் கிலோ மீட்டராக இருந்த அளவுகோல், ஜனவரி 2020–இல் 2.53 லட்சம் கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது.

## 2.6 போக்குவரத்துத் துறையின் சமீபத்திய முயற்சிகள்

தமிழக அரசின் போக்குவரத்துத் துறையின் கீழ் இயங்கும் அரசு போக்குவரத்துக் கழகங்கள் கடந்த சில காலாண்டுகளில் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

### அ) புதிய பேருந்துகள்

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டில், 5,000 பேருந்துகள் ரூபாய் 1,502 கோடி செலவில் அரசால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசு பேருந்துகளின் சராசரி வயது 6.1 ஆண்டாக குறைந்துள்ளது. மேற்படி பேருந்துகள் அனைத்தும் AIS 052 வடிவமைப்பினை கொண்டது. இப்பேருந்துகள் பொது மக்களிடம் அதிக வரவேற்பை பெற்றுள்ளன.

### ஆ) பயணிகள் தகவல் அமைப்பு (LAMB)

பயணிகள் தகவல் அமைப்பினை அனைத்து அரசு பேருந்துகளிலும் செயல்படுத்திட போக்குவரத்துத் துறை முடிவெடுத்துள்ளது. இதற்காக “Locate and Access my Bus” எனும் செல்லிடப் பேசி மற்றும் இணையதள செயலி மூலம் பேருந்துகள் செல்லுமிடம் மற்றும் பேருந்துகள் பேருந்து நிலையத்திற்கு வரும் நேரங்களை அறிந்துக் கொள்ளலாம்.

## இ) குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகம்

பயணிகளின் தேவைகளை கருத்திற்கொண்டு மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 48 குளிர்சாதனப் பேருந்துகளையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கரூர் மண்டலத்தில் 2 குளிர்சாதனப் பேருந்துகளையும் குறிப்பிட்ட வழித்தடங்களில் அறிமுகப்படுத்தியுள்ளன. மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் அண்டை மாநிலங்களுக்கிடையே 240 குளிர்சாதனப் பேருந்துகளில் 34 படுக்கை வசதியுடன் கூடிய பேருந்துகளை இயக்குகின்றன. பிற அரசு போக்குவரத்துக் கழகங்களும் 100 குளிர்சாதனப் பேருந்துகளை இயக்குகின்றன. குளிர்சாதனப் பேருந்துகள் கூடுதலாக போக்குவரத்துக் கழகங்களில் இணைக்கப்படும்.

## ஈ) சாலைப் பாதுகாப்பு முயற்சிகள்

விபத்தில்லா பேருந்து இயக்கத்தை அடைய போக்குவரத்துத் துறை உறுதி பூண்டுள்ளது. இதனை செயல்படுத்திட அரசு பேருந்துகளில் தானியங்கி கதவுகள் பொருத்துதல், கூடுதல் கண்ணாடிகளைப் பொருத்துதல், மறைவு பகுதிகளை (Blind Spots) தொடர்பான பிரச்சனைகளை சரிசெய்தல், தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த தன்மை கருவி மூலம் ஓட்டுநர் பயிற்சி அளித்தல் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அரசு பேருந்துகளால் உண்டாகும் விபத்துகள் கணிசமாக

குறைந்துள்ளன. இந்த முயற்சிகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில் போக்குவரத்து ஆணையரகத்துடன் இணைந்து போக்குவரத்துத் துறை செயல்பட்டு வருகின்றது.

### உ) மாநில நிலையான நகர்புறப் போக்குவரத்துக் கொள்கை

நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்து ஆணையரகம், இரயில்வே, சென்னை மாநகராட்சி மற்றும் இதர தொடர்புடைய துறைகளுடன் இணைந்து மாநில நிலையான நகர்புறப் போக்குவரத்துக் கொள்கையினை உருவாக்கிட போக்குவரத்துத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. இந்த கொள்கையானது, கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் பொதுப் போக்குவரத்து விரிவாக்கம் மற்றும் பயன்பாட்டுக்கான கட்டமைப்பை ஏற்படுத்திட வழிவகுக்கும். இக்கொள்கையானது, இலக்குகளை குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் அடைய வேண்டும் என்பதை உறுதியாக வலியுறுத்துகிறது. இக்கொள்கை, தகவல் மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு செய்வதன் வழியாக பொது போக்குவரத்தின் பயன்பாட்டை விரிவுபடுத்தி அதன் நோக்கத்தை அடைவதற்கு தேவையான அழுத்தத்தினை அளிக்கும்.

## 2.7 பருவ நிலை நட்பு முயற்சிகளுக்கு அர்ப்பணிப்பு

C40 தூய்மையான பேருந்து அறிவிப்பில் போக்குவரத்துத் துறை ஏற்கெனவே கையெழுத்திட்டுள்ளது. தூய்மையான மற்றும் பசுமையான எரிபொருட்களுக்கு இடம்பெயரும் உறுதியான

உறுதிப்பாட்டை குறிக்கும் வகையில் இந்த உலகளாவிய பிரகடனத்தில் 2018-ஆம் ஆண்டு கையெழுத்திட்டதன் மூலம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதன் மூலம், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலிருந்து வெளியேற்றப்படும் புகையைக் குறைக்க உலக அளவில் ஒரு அறிவார்ந்த நகரங்களுடன் தமிழக அரசு தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறை, மின்சாரப் பேருந்துகளை சென்னையில் அறிமுகப்படுத்தும் பொருட்டு, வலுவான கட்டமைப்பு மற்றும் விரிவான திட்டத்தினை உருவாக்குதல் மற்றும் இதர நகரங்களில் இயங்கும் மின்சாரப் பேருந்துகளில் சிறந்த நடைமுறைகளை அறிந்திட C40 பருவநிலை குழுவுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. அடுத்த சில ஆண்டுகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் உத்தேசிக்கப்பட்டுள்ள சுமார் 12,000 புதிய பேருந்துகளில் ஏறத்தாழ 2,000 மின்சாரப் பேருந்துகள் அடங்கும். இதன் மூலம் சீனாவிற்கு வெளியே மிக அதிகளவிலான மின்சார பேருந்துகளை இயக்கும் மாநிலமாக தமிழ்நாடு உருவாக வழிவகுக்கும். நடுவண் அரசின் கனரக தொழில் அமைச்சகத்தின் ஃபேம் இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 525 மின்சார பேருந்துகளை கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்த முயற்சிகள், மாநிலத்தில் உள்ள கரியமில வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் அரசின் முயற்சியில் ஒரு பகுதியாகும்.

## 2.8. போக்குவரத்துத் துறை எதிர்கொள்ளும் சவால்கள்

உலகிலுள்ள வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள பொது போக்குவரத்துத் துறையானது, தனியார் போக்குவரத்து வருகை, போக்குவரத்து நெரிசல், அனைத்து இடங்களுக்கும் போக்குவரத்து வழங்குவதிலுள்ள சிக்கல் மற்றும் மரபு வழி எரிபொருள்களின் பயன்பாடு போன்ற பல்வேறு காரணிகளால் கடுமையான சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. எனவே, பின்வரும் சவால்களை தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் எதிர்கொண்டுள்ளன.

### அ) பேருந்துகளின் அதிகப்படியான இயக்கச் செலவு

தனியார் போக்குவரத்து துறையினரால் ஏற்படும் போட்டி மற்றும் அவர்களின் மேம்பட்ட உள்கட்டமைப்பு, குறைந்த நிறுவனச் செலவுகள் மற்றும் குறைந்த விதிமுறை கட்டுப்பாடுகள் ஆகியவற்றால் பொதுப் போக்குவரத்தின் வருவாய் குறைந்து அதன் சுய நிலைப்புத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், பல்வேறு அரசு அமைப்புகளின் போட்டித் தேவையின் காரணமாக, அரசின் போக்குவரத்து உள்கட்டமைப்புகளுக்கு நிதி ஒதுக்குவதற்கு வரையறைகள் உள்ளன.

### ஆ) நிறுவன ஒருங்கிணைப்பு

மிகவும் பரவலாகக் காணப்படும் சூழலமைப்பில் போக்குவரத்து இயங்கி வருகிறது. தொடர்பு துறைகளின் ஈடுபாடு

போக்குவரத்துத்துறையின் திறமையை வலுவாக மேம்படுத்தும். தென்னக இரயில்வே, இந்திய விமான நிலையங்கள் ஆணையம் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து பொதுமக்களுக்கான கடைக்கோடி பகுதிகளுக்கும் பேருந்து சேவையினை அளித்திட போக்குவரத்துத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

**இ) திறன்**

கடந்த சில ஆண்டுகளில் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் கணிசமாக உயர்ந்துள்ளது. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தகுதியை மேம்படுத்தவும், போட்டி திறனை வளர்த்துக் கொள்ளவும் பணியாளர்களின் திறன் மேம்பாடு அதிகரிக்கப்பட வேண்டும். இதனால், போக்குவரத்துத்துறை தனது பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகின்றது.

**ஈ) உள்கட்டமைப்பு கட்டுப்பாடுகள் (பணிமனைகளை தரம் உயர்த்துதல்)**

மக்கள் தொகை உயர்வால், பேருந்துகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தனிநபர் வாகனப் பெருக்கத்தால் ஏற்படும் போக்குவரத்து செரிசல் மற்றும் நகரங்களில் போதிய இடவசதி இல்லாததால் அரசு பேருந்துகள் மற்றும் பணிமனைகளின் கூடுதல் கொள்ளளவினை உயர்த்துதலில் தடை ஏற்படுகின்றன. அதன் மூலம் ஏற்படும் நடைகளின் எண்ணிக்கையினை குறைக்க வழிவகுக்கும். தற்போதுள்ள

பணிமனைகளின் கொள்ளளவினை உயர்த்துவதற்கு மூலதன முதலீடு மற்றும் கூடுதல் தரைப்பரப்பு குறியீடு (FSI) தேவைப்படுகின்றன. இவ்வகையில், கீழ்க்காணும் பணிமனைகளை நவீனமயமாக்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சி கழகத்தின் (TNIDB) உதவியுடன் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் நடைபெற்று வருகின்றது.

அ. அடையாறு

ஆ. பெரும்பாக்கம்

இ. மத்திய பணிமனை

ஈ. அண்ணா நகர்

உ. பூவிருந்தவல்லி

ஜெர்மனி நிதி நிறுவன (KfW) நிதியுதவியின் கீழ் முதற்கட்டமாக மின்சார பேருந்துகளை பயன்படுத்துவதற்கு ஒரு பகுதியாக இப்பணிமனைகள் செயல்படும்.

**உ) போக்குவரத்து நெரிசல்**

தனிநபர் போக்குவரத்தின் வருகை மற்றும் பிற முறைசாரா போக்குவரத்துகளான ஷேர் ஆட்டோக்கள், மினி வேன்கள் ஆகியவற்றின் பயன்பாடு அதிகரிப்பின் காரணமாக வாகன நெரிசல் ஏற்படுகின்றது. மேலும், குறைவான வாகன நிறுத்துமிட வசதி மற்றும் தனியார் வாகன பயன்பாடுகளின் அதிகரிப்பின் விளைவாக

சாலைகளில் நெரிசல் ஏற்படுகின்றது, இதன் காரணமாக அரசு பேருந்துகளின் செயல்திறன் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் நடைகளின் இயக்க தூரம் மற்றும் எரிபொருள் செலவு அதிகரிக்கின்றன.

## 2.9. முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள்

### அ) அரசுப் பேருந்துகளில் கண்காணிப்பு கேமரா

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய அரசுப் பேருந்துகளில் கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம், நிர்பயா நிதியத்தின் கீழ் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி, சென்னையில் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்படும் 2,000 மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தலா 4 கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. மேலும் பல்வேறு முனையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. இத்திட்டம், செயல்பாட்டினைப் பொறுத்து அதிகப் பேருந்துகளுக்கு விரிவுப்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக, 2020–2021-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 75.02 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆ) பொதுப் பயண அட்டை மற்றும் மின்னணுப் பயணச்சீட்டு இயந்திரம்

மாநகர் போக்குவரத்துக் கழகம் பொது பயண அட்டை திட்டத்தினை செயல்படுத்திட நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயணிகள் தங்களின் பொது பயண அட்டையினை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பொது போக்குவரத்து அமைப்பிலும் பயன்படுத்த இயலும். இத்திட்டம் தனியார் மற்றும் அரசு பங்களிப்பு முறையில் செயல்படுத்தப்படும்.

## இ) சாலைப் பாதுகாப்பு முயற்சிகள்

விபத்தில்லா பேருந்து இயக்கத்தை அடைய போக்குவரத்துத் துறை உறுதிபூண்டுள்ளது. இதற்காக, அரசு போக்குவரத்துக் கழகங்களில் பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. மேலும், சாலைப் பாதுகாப்பு முயற்சிகளை விரிவுபடுத்தும் வகையில் போக்குவரத்துத்துறை, போக்குவரத்து ஆணையரகத்துடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது. இது தொடர்பாக கீழ்க்காணும் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன:

1. அருகாமையில் உள்ள வாகனங்களை அறியும் கருவி (Proximity buzzers)
2. அதிக விபத்து வழித்தடங்களில் இயங்கும் பேருந்துகளுக்கான பாதுகாப்பினை உறுதி செய்தல்.

3. விபத்துகளை குறைக்க வண்ணங்கள் குறியிடப்பட்ட முனையங்களை அமைத்தல்.

4. தானியங்கி கதவுகள்.

5. பயணங்களின்போது பேருந்து இயக்கம் தொடர்பான அறிவிப்புகள்.

6. மறைவு பகுதிகளை (Blind Spots) காட்டும் கூடுதல் கண்ணாடிகளைப் பொறுத்துதல்.

7. விபத்துக்களின் அறிவியல் பகுப்பாய்வு செய்தல்.

8. தகவல் தொடர்பு ஆலோசகரை பணியமர்த்துதல்.

9. ஓட்டுநர் பயிற்சி.

10. ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்குக்கான வசதிகளை மேம்படுத்துதல்.

ஈ) **மாநில போக்குவரத்து சிறப்பு பணிப்பிரிவு:** மாநில போக்குவரத்து சிறப்பு பணிப்பிரிவு ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது. இப்பிரிவு, ஒரு நிலையான நகரப் போக்குவரத்து கொள்கையினை வடிவமைப்பதற்கு அரசிற்கு உதவி செய்யும். தமிழ்நாட்டிற்கு போக்குவரத்துக் கொள்கையினை உருவாக்குவதே இப்பணிப்பிரிவின் நோக்கமாகும்.

## உ) ஜெர்மனி நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

### 1. குறைந்த புகை வெளியேற்றும் பேருந்து கொள்முதல்

ரூபாய் 1, 580 கோடி செலவில், ஜெர்மனி நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுமார் 2,213 BS VI பேருந்துகளை கொள்முதல் செய்ய அரசு தீர்மானித்துள்ளது. இது அரசுப் பேருந்துகளிலிருந்து வெளியேற்றப்படும் புகை அளவினையும் நச்சினையும் குறைக்கும். 2020–2021–ஆம் ஆண்டில் ரூ. 960 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2. மின்சாரப் பேருந்துகள் கொள்முதல்

மாசு வெளியேற்றத்தை குறைக்கும் பொருட்டு, 500 மின்சாரப் பேருந்துகளை ஜெர்மனி நிதி நிறுவன நிதியுதவியுடன் கொள்முதல் செய்வதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு, அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் மின்சார பேருந்துகளாக மாற்றம் செய்யப்படும்.

### 3. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்

இன்றைய உலகில் தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகள் பிரிக்க முடியாத பகுதியாக உருவெடுத்துள்ளது. அரசுப்

போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திடவும், கைமுறை தரவுகளை மின்னணு தரவுகளாக மாற்றிடவும் அரசு திட்டமிட்டுள்ளது.

### 4. திட்ட செயலாக்க அலகு (PIU)

போக்குவரத்துத் துறை, ஜெர்மனி நிதி நிறுவன நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைக்கும் பொருட்டு, திட்ட செயலாக்க அலகு (PIU) ஒன்றை போக்குவரத்துத்துறை ஏற்படுத்தியுள்ளது. அரசு அலுவலர்கள், போக்குவரத்து வல்லுநர்கள் மற்றும் முன்னணி கல்வியாளர்கள் இவ்வலகில் இடம் பெற்றுள்ளனர். இத்திட்டங்களுக்கான செயலாக்கம் மற்றும் அதன் தொடர்பானவற்றையும் மதிப்பீடு செய்ய இவ்வலகு உதவும்.

## 2.10 அரசு போக்குவரத்துக் கழகங்களின் அலகுகள்

அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் கீழ்க்கண்ட அலகுகள் உள்ளன:-

| பணிமனைகள் (கிராமம் மற்றும் நகர்ப்புறம்) | இயந்திர மறுசீரமைப்பு பிரிவு மற்றும் தொழிற்கூடங்கள் | பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் | உருளிப்பட்டை (Tyre) புதுப்பிக்கும் தொழிற்கூடங்கள் | பேருந்து தரச்சான்று அளிக்கும் பிரிவுகள் |
|---|---|---|---|---|
| 322 | 20 | 23 | 18 | 51 |

## 2.11 அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்து சேவைகள்

**31.01.2020** அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பல்வேறு பேருந்துச் சேவைகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:–

| | |
|---|---|
| சென்னை – மாநகர் பேருந்துகள் | 3,439 |
| நகர் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 6,636 |
| புறநகர் பேருந்துகள் | 7,842 |
| மலைப்பகுதி பேருந்துகள் | 497 |
| **விரைவுப் பேருந்துகள்** | |
| மாநிலத்திற்குள் | 615 |
| வெளிமாநிலங்களுக்கு | 467 |
| மொத்த இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை | 19,496 |
| மொத்த இயக்கப் பேருந்துகளுக்கான உபரிப் பேருந்துகள் | 1,448 |
| **மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை** | **20,944** |

## 2.12 இயக்கச் செயல்பாட்டு திறன் குறியீடுகள்

**2011–2012** முதல் **2019–2020** (ஜனவரி **2020** வரை) வரையிலான ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கச் செயல்பாட்டு திறன் குறியீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| பொருள் | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 (ஜனவரி 2020 வரை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 21,207 | 22,053 | 22,501 | 22,474 | 23,078 | 22,533 | 21,744 | 21,542 | 20,944 |
| அட்டவணைப் படுத்தப்பட்ட சேவைகள் | 19,507 | 20,500 | 20,684 | 20,684 | 20,839 | 20,776 | 19,490 | 19,489 | 19,496 |
| ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 88.44 | 89.78 | 91.20 | 90.21 | 94.02 | 92.55 | 87.22 | 85.23 | 84.07 |
| பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.01 | 0.01 | 0.01 | 0.004 | 0.004 | 0.004 | 0.003 | 0.002 | 0.002 |
| விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.22 | 0.20 | 0.20 | 0.18 | 0.18 | 0.16 | 0.15 | 0.14 | 0.12 |
| உயிரிழப்பு விபத்துகள் | 1,237 | 1,233 | 1,187 | 1,165 | 1,258 | 1,209 | 1,085 | 1033 | 739 |
| விபத்துகளில் இறந்தவர் களின் எண்ணிக்கை | 1,397 | 1,382 | 1,318 | 1,331 | 1,460 | 1,373 | 1,247 | 1159 | 834 |
| எரிபொருள் செயல் திறன் (கி.மீ/ லிட்டருக்கு) சராசரியாக | 5.25 | 5.27 | 5.26 | 5.30 | 5.29 | 5.33 | 5.33 | 5.33 | 5.33 |
| கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்) | 1.65 | 1.80 | 1.82 | 1.92 | 2.01 | 2.08 | 2.22 | 2.37 | 2.53 |
| ஆள் ஒன்றுக்கு பேருந்து | 6.40 | 6.31 | 6.43 | 6.48 | 6.52 | 6.51 | 6.82 | 6.53 | 6.39 |

## 2.13 இயக்கச் செலவினம்

2019–2020 (ஜனவரி 2020 வரை) ஆம் ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் விவரம் சதவீதத்தில் கீழ்வருமாறு:

| வ. எண். | இயக்கச் செலவு வகைகள் | சதவீதத்தில் |
|---|---|---|
| 1. | சம்பளம் | 54.33 |
| 2. | டீசல் | 27.02 |
| 3. | பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | 2.15 |
| 4. | தேய்மானம் | 3.21 |
| 5. | வட்டி | 9.25 |
| 6. | வரிகள் | 1.38 |
| 7. | மற்றவை (மின்கட்டணம், எழுதுபொருள் இதர) | 2.66 |
| | **மொத்தம்** | **100.00** |

## 2.14 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய்

டீசல் விலை அடிக்கடி உயர்ந்து வருவதாலும், உதிரி பாகங்களின் விலை உயர்வாலும், ஊதிய ஒப்பந்தத்தாலும் மற்றும் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வழங்குவதாலும் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் செலவினங்கள் ஏற்படுகின்றன.

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பிரதான தலைப்பின்கீழ் கடந்த ஏழு ஆண்டுகளில் ஈட்டிய மொத்த வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

**(ரூபாய் கோடியில் / நாள் ஒன்றுக்கு)**

| ஆண்டு | நாளொன்றுக்குப் பேருந்துக் கட்டண வசூல் | இதர வருவாய் | மொத்த வருவாய் |
|---|---|---|---|
| 2012–13 | 19.87 | 3.01 | 22.88 |
| 2013–14 | 20.12 | 4.59 | 24.71 |
| 2014–15 | 20.50 | 4.41 | 24.91 |
| 2015–16 | 20.76 | 2.77 | 23.53 |
| 2016–17 | 20.76 | 4.91 | 25.67 |
| 2017–18 | 21.41 | 5.27 | 26.68 |
| 2018–19 | 24.17 | 5.20 | 29.37 |
| 2019–20 (ஜனவரி 2020 வரை) (தணிக்கைக்கு முன்) | 24.04 | 4.96 | 29.00 |

## 2.15. அரசு வழங்கிய நிதியுதவி விவரங்கள்

**2011–2012** முதல் **2019–2020** வரை, (ஜனவரி **2020** வரை) பங்கு மூலதன உதவி (Share Capital Assistance), கடன் (Loan),

வழிவகை முன்பணம் (Ways & Means Advance), உதவித்தொகை (Grant), மாணவர் கட்டணச் சலுகையை ஈடு செய்தல் (Reimbursement of Student Concession Subsidy) ஆகிய வகைகளில் ரூ.18,092.17 கோடிகளை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் அரசு வழங்கியுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

### i. பங்கு மூலதன உதவி

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பங்கு மூலதனம் (புதிய பேருந்துகள்) | | மாநில புது முயற்சிகள் நிதி | மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் | புத்தகக் கணக்குகளில் நிலுவைத் தொகையைக் குறைக்க நடைமுறை மூலதனமாக / மூலதனச் செலவினத்தைச் சரிசெய்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | த.போ.வ. நி.நி | அ.போ.க | | | | |
| 2011–12 | - | 155.26 | - | 7.03 | – | 162.29 |
| 2012–13 | – | 150.00 | – | 24.63 | – | 174.63 |
| 2013–14 | – | – | – | – | 350.00 | 350.00 |
| 2014–15 | – | 125.00 | – | – | 228.00 | 353.00 |
| 2015–16 | – | – | – | – | 150.00 | 150.00 |
| 2016–17 | – | 150.00 | – | – | – | 150.00 |
| 2017–18 | – | – | – | – | – | – |
| 2018–19 | 712.54 | – | – | – | – | 712.54 |

| ஆண்டு | பங்கு மூலதனம் (புதிய பேருந்துகள்) | | மாநில புது முயற்சிகள் நிதி | மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் | புத்தகக் கணக்குகளில் நிலுவைத் தொகையைக் குறைக்க நடைமுறை மூலதனமாக / மூலதனச் செலவினத்தைச் சரிசெய்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | த.போ.வ. நி.நி | அ.போ. க | | | | |
| 2019–20 (ஜனவரி 2020 வரை) | 302.06 | 140.00 | 0.50 | 0 | – | 442.56 |
| **மொத்தம்** | **1014.60** | **720.26** | **0.50** | **31.66** | **728.00** | **2495.02** |

அண்மையில், நிலுவையில் உள்ள வழிவகை முன்பணம் மற்றும் அதன் வட்டி ரூ.3001.4717 கோடியினை மூலதனப் பங்காக அரசால் மாற்றப்பட்டுள்ளது.

## ii. கடன்கள் மற்றும் வழிவகை முன்பணங்கள்

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | புதிய பேருந்து கள் | பேருந்து களைப் புதுப்பித்தல் | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | ஊதிய ஒப்பந்தம் / ஊக்கத் தொகை / அகவிலைப்படி நிலுவை | ஓய்வு பெற்றவர் களின் பணப்பலன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2011–12 | 137.50 | 24.40 | 25.00 | 81.03 | 178.14 | – | 446.07 |
| 2012–13 | – | – | 13.91 | – | – | – | 13.91 |
| 2013–14 | – | 24.40 | – | – | – | – | 24.40 |
| 2014–15 | 81.61 | – | 39.73 | – | – | – | 121.34 |

| ஆண்டு | புதிய பேருந்து கள் | பேருந்து களைப் புதுப்பித்தல் | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | ஊதிய ஒப்பந்தம் / ஊக்கத் தொகை / அகவிலைப்படி நிலுவை | ஓய்வு பெற்றவர் களின் பணப்பலன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2015–16 | 125.00 | – | – | – | 360.00 | 116.00 | 601.00 |
| 2016–17 | 57.34 | – | – | – | 198.45 | – | 255.79 |
| 2017–18 | – | – | 385.23 | – | 261.63 | 2247.39 | 2894.25 |
| 2018–19 | 125.00 | – | – | – | 325.47 | 487.55 | 938.02 |
| 2019–20 (ஜனவரி 2020 வரை) | – | – | – | – | 206.52 | 1093.00 | 1299.52 |
| **மொத்தம்** | **526.45** | **48.80** | **463.87** | **81.03** | **1530.21** | **3943.94** | **6594.30** |

## iii. உதவித் தொகை

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | விபத்தின்றிப் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு முதலமைச்சரின் விருது | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011–12 | 20.00 | – | 2.78 | 22.78 |
| 2012–13 | 20.00 | 200.00 | 2.78 | 222.78 |
| 2013–14 | 20.00 | 500.00 | 1.60 | 521.60 |
| 2014–15 | 20.00 | 600.00 | 2.78 | 622.78 |
| 2015–16 | 30.00 | 256.72 | 2.78 | 289.50 |

| ஆண்டு | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | விபத்தின்றிப் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு முதலமைச்சரின் விருது | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2016–17 | 30.00 | 617.17 | 5.88 | 653.05 |
| 2017–18 | 30.00 | 816.12 | 3.86 | 849.98 |
| 2018–19 | 30.00 | 333.08 | 3.00 | 366.08 |
| 2019–20 (ஜனவரி 2020 வரை) | 30.00 | 237.55 | – | 267.55 |
| **மொத்தம்** | **230.00** | **3560.64** | **25.46** | **3816.10** |

### iv. மாணவர் பயணச் சலுகைக்கான கட்டணங்களை ஈடுசெய்தல்

**2011–2012** முதல் **2019–2020** (ஜனவரி **2020** வரை) வரையிலான ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) மாணவர் பயணக் கட்டணச் சலுகையை ஈடுசெய்வதற்காக ரூ.**5,094.35** கோடிகளை அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## V. மூத்த குடிமக்கள் மற்றும் இதர பயணச் சலுகைகள்

மூத்த குடிமக்களுக்கான பயணச் சலுகையை ஈடுசெய்வதற்காக மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.92.40 கோடியும் மற்றும் இதர பயணச் சலுகைகள் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கப்படுகிறது.

## 2.16 உயர்வேக டீசல் (HSD) ஈடுசெய்தல்

உயர்வேக டீசல் விலை உயர்வை ஈடு செய்யும் வகையில், 2012–2013 முதல் 2017–2018 வரையிலான ஆண்டுகளில் அரசு கீழ்க்கண்டவாறு ஈடு செய்துள்ளது.

(ரூபாய் கோடியில்)

| வ.எண். | ஆண்டு | தொகை |
|---|---|---|
| 1. | 2012–2013 | 200.00 |
| 2. | 2013–2014 | 500.00 |
| 3. | 2014–2015 | 600.00 |
| 4. | 2015–2016 | 256.72 |
| 5. | 2016–2017 | 617.17 |
| 6. | 2017–2018 | 816.12 |

தற்போது, 20.01.2018–லிருந்து (பேருந்து கட்டணம் திருத்தம்) டீசலுக்கான அடிப்படை விலையை அரசே நிர்ணயித்தும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் அடிப்படை விலைக்கு மேல் ஆகக்கூடிய கூடுதல் செலவுகளை ஈடுசெய்ய அனுமதியும் அளித்துள்ளது. அதனடிப்படையில், 2018–19–ஆம் ஆண்டிற்காக ரூ.333.0766 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், 2019–2020 (ஜனவரி 2020 வரை) ஆண்டிற்கான வரவு–செலவு திட்டத்தில் ரூ.237.55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–3

## சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

**3.1** தமிழ்நாடு நகரமயமாக்கப்பட்ட மாநிலமாக திகழ்வதால் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களை சாலையில் இயக்கிக்கொண்டு இருக்கிறது. மேலும் சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துக்களை குறைப்பதற்கு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகிறது. மேலும், விபத்துகளுக்கான காரணங்களை ஆய்வு செய்து அதனைக் குறைக்கும் பொருட்டு நிலையான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பேருந்து ஏறும் / இறங்கும் இடத்தில் ஏற்படக்கூடிய விபத்து, குறிப்பிட்ட மாதம் / குறிப்பிட்ட நாளில் / குறிப்பிட்ட நேரத்தில் அடிக்கடி ஏற்படக்கூடிய விபத்து, சாலையின் தன்மை, பலவகையான பயனாளிகள் குறித்தும் ஆய்வு செய்யப்படுகிறது.

### 3.2 சாலை விபத்துக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள்

சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு மாநில அரசு போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்காணும் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

i. தொடர் பயிற்சி, பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு மற்றும் சம்பந்தப்பட்டவர்களை ஊக்குவித்தல்.

ii. விபத்துக்கள் அதிகமாக நடைபெறும் இடங்களை கண்டறிதல்.

iii. வாகனம் ஓட்டும்பொழுது கைபேசி உபயோகித்தல் மற்றும் மது அருந்துதல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

iv. போக்குவரத்துத்துறை மற்றும் மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களின் பறக்கும்படை உதவியுடன் சுவாசப் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு, பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்துதல். மேலும் காவல் துறையின் மூலமும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடச் செய்தல்.

v. ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

vi. அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து நெடுஞ்சாலைத் துறை மற்றும் காவல்துறை உதவியுடன் சாலைகளை மேம்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான எச்சரிக்கை பலகைகள் வைப்பது மற்றும் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த இடங்களில் அறிவிப்புப் பலகைகளை நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் விபத்து ஏற்படுவதை தடுத்தல்.

vii. விபத்தின்றிப் பணிபுரியும் அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலமைச்சரின் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுக்காக, **2011–2019**–ஆம் ஆண்டுகளில் ரூ.**25.46** கோடி கீழ்க்கண்டவாறு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | தொகை |
|---|---|
| 2011–2012 | 2.78 |
| 2012–2013 | 2.78 |
| 2013–2014 | 1.60 |
| 2014–2015 | 2.78 |
| 2015–2016 | 2.78 |
| 2016–2017 | 5.88 |
| 2017–2018 | 3.86 |
| 2018–2019 | 3.00 |
| **மொத்தம்** | **25.46** |

கடந்த ஏழு ஆண்டுகளில் உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2013–14 | 20,684 | 1,187 | 1,318 |
| 2014–15 | 20,684 | 1,165 | 1,331 |

| | | | |
|---|---|---|---|
| 2015–16 | 20,839 | 1,258 | 1,460 |
| 2016–17 | 20,776 | 1,209 | 1,373 |
| 2017–18 | 19,490 | 1,085 | 1,247 |
| 2018–19 | 19,489 | 1,033 | 1,159 |
| 2019–20 (ஜனவரி 2020 | 19,496 | 739 | 834 |

**2015–16** முதல் விபத்துகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வந்துள்ளது. இதற்கான முயற்சி இனியும் தொடரும்.

## 3.3 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், நீதிமன்றத்தை நாடாமல் விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும் பொருட்டு விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் (Corpus Fund) ஒன்று **2010–2011** ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன்படி, **2010–2011** முதல் **2014-2015** வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் முறையே அரசின் பங்காக ஆண்டொன்றுக்கு ரூ.**20** கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.**20** கோடியையும் சேர்த்து ஆகமொத்தம் ரூ.**40** கோடியில் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் ஏற்படுத்தப்பட்டது. இந்த விபத்து இழப்பீட்டுத் தொகை நிதி **2015–16**–ஆம் ஆண்டு முதல் ரூ.**40** கோடியிலிருந்து ரூ.**60** கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.**30** கோடியும்,

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.30 கோடியும் வழங்கப்படுகிறது. மேற்படி நிதியம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. 20.01.2018 முதல் பேருந்து பயணிகளிடம் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தீர்வை வசூல் செய்து அதனைக் கொண்டு விபத்து இழப்பீடு, விபத்து தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.

**(ரூபாயில்)**

| **வ.எண்.** | **பயண கட்டண வரம்பு** | **நகர்** | **புறநகர்** |
|---|---|---|---|
| | | **பயணிகளிடமிருந்து தீர்வை** | **பயணிகளிடமிருந்து தீர்வை** |
| 1. | ரூ.25 வரை | 1 | 1 |
| 2. | ரூ.26 முதல் ரூ.50 வரை | – | 2 |
| 3. | ரூ.51 முதல் ரூ.75 வரை | – | 3 |
| 4. | ரூ.76 முதல் ரூ.100 வரை | – | 4 |
| 5. | ரூ.101 முதல் ரூ.200 வரை | – | 5 |
| 6. | ரூ.201 முதல் ரூ.300 வரை | – | 6 |
| 7. | ரூ.301 முதல் ரூ.400 வரை | – | 7 |
| 8. | ரூ.401 முதல் ரூ.500 வரை | – | 8 |
| 9. | ரூ.501 –க்கு மேல் | – | 10 |

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் இசைவுடன் (consent) கீழே குறிப்பிட்டுள்ளவாறு இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்படும்.

### i. உயிரிழப்பிற்கான இழப்பீட்டுத் தொகை

(ரூபாய் இலட்சத்தில்)

| வயது வரம்பு | தொகை |
|---|---|
| 1 – 15 | 2.5 |
| 16 – 60 | 5.0 |
| 60 வயதுக்கு மேல் | 2.5 |

### ii. காயங்களுக்கான இழப்பீட்டுத் தொகை

(ரூபாயில்)

| | | |
|---|---|---|
| 1) | சிறுகாயம் – I<br>சிறுகாயம் – II<br>மருத்துவமனையில் சிகிச்சை (2 நாட்கள்) | 10,000<br>25,000 |
| 2) | தலை காயம் மற்றும் நிரந்தர உறுப்பு இழப்பு | 5,00,000 |
| 3) | கொடுங்காயம் மற்றும் எலும்பு முறிவு – மருத்துவமனை தீவிர சிகிச்சை (7 நாட்கள்)<br>எலும்பு முறிவு – மருத்துவமனை தீவிர சிகிச்சை (4 நாட்கள்) | 2,00,000<br>1,00,000 |

விபத்து இழப்பீட்டினை விரைவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் இசைவுடன் நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்டு வழங்கும் பொருட்டு ஒரு குழுவும் மற்றும் இழப்பீடு தொகை வழங்குவதற்கான வழிமுறையும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 31.01.2020 வரை அரசு போக்குவரத்துக் கழகங்களால் இத்திட்டத்தின் மூலம் 37 வழக்குகளுக்கு ரூ.82.69 இலட்சம் நேரிடையாக வழங்கப்பட்டுள்ளது.

## 3.4 தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியம்

விபத்து இழப்பீட்டு வழக்குகளை விரைவாக தீர்ப்பதற்காக வசூலிக்கப்படும் சுங்கவரி கட்டணங்களை நிர்வகிக்க, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டண நிதி அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளது.

## 3.5 மக்கள் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு செய்யப்பட்ட வழக்குகள்

மக்கள் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு செய்யப்பட்ட விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் தொகுப்பு நிதியிலிருந்து இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, கடந்த எட்டு ஆண்டுகளில், தீர்வு செய்யப்பட்ட வழக்குகளுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களினால் வழங்கப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| **ஆண்டு** | **வழக்குகளின் எண்ணிக்கை** | **மக்கள் நீதிமன்றம் மூலமாகத் தீர்வு செய்யப்பட்ட தொகை** |
|---|---|---|
| 2011–2012 | 884 | 997.21 |
| 2012–2013 | 1,867 | 3,466.29 |
| 2013–2014 | 1,160 | 569.22 |
| 2014–2015 | 897 | 1,028.14 |
| 2015–2016 | 479 | 1,222.62 |
| 2016–2017 | 404 | 1,241.25 |
| 2017–2018 | 1,187 | 4,883.14 |
| 2018–2019 | 2,832 | 15,964.20 |
| 2019–2020 (ஜனவரி 2020 வரை) | 882 | 2,780.48 |
| **மொத்தம்** | **10,592** | **32,152.55** |

# அத்தியாயம்–4

# பொதுமக்களின் சேவைகளை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

## 4.1 பேருந்துகளின் இயக்கம்

**31.01.2020** அன்றுள்ளவாறு, தற்போது அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை **19,496** ஆகும். ஒரே வழித்தடத்தில் இயங்கும் அரசுப் பேருந்துகளுக்கு இடையேயான ஆரோக்கியமற்ற போட்டியை குறைப்பதற்கும், குறைந்த பயணிகளைக் கொண்டு இயங்கும் வழித்தடங்களை கண்டறிவதற்கும் இணையொத்த வழித்தடங்களை இணைப்பதற்கும் வழித்தட சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பயணிகள் தகவல் அமைப்பு (LAMB) மற்றும் மின்னணுப் பயணச்சீட்டுக் கருவிகள் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் தரவுகளைக் கொண்டு எதிர்காலத்தில் வழித்தடங்களை சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையினால் பேருந்துகளின் இயக்கத் திறன் அதிகரிப்பது மட்டுமின்றி, பேருந்து சேவையில்லாத பகுதிகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவை அளிக்கப்படும்.

## 4.2 புதிய பேருந்துகள் அறிமுகம்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பயன்படுத்தப்பட இயலாத நிலையிலிருக்கும் மிகவும் பழமையான பேருந்துகளுக்குப் பதிலாக 14,153 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், 2011–2012 முதல் 2019-2020 (ஜனவரி 2020 வரை) ஆம் ஆண்டுகளில், மலை சார்ந்த பகுதிகளுக்கு 208 பேருந்துகளும், 300 சிற்றுந்துகளும் வாங்குவதற்கு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. அதன் விவரங்கள் பின்வருமாறு :

| ஆண்டு | பேருந்துகளின் எண்ணிக்கை | மலைப் பகுதிப் பேருந்துகளின் எண்ணிக்கை | சிற்றுந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011–12 | 3,000 | – | – |
| 2012–13 | 2,953 | – | 100 |
| 2013–14 | – | 208 | – |
| 2014–15 | 1,200 | – | 100 |
| 2016–17 | 2,000 | – | 100 |
| 2018–19 | 3,000 | – | – |
| 2019–20 | 2,000 | – | – |
| **மொத்தம்** | **14,153** | **208** | **300** |

## 4.3 புதிய பணிமனைகள்

31.01.2020 அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளின் எண்ணிக்கை 322 ஆகும். 74 புதிய பணிமனைகள் அமைக்கப்படும் நடவடிக்கையில், 44 பணிமனைகள் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளன. மேலும், 4 பணிமனைகளின் கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

## 4.4 சென்னையில் சிற்றுந்துகள் அறிமுகம்

பேருந்து வசதிகள் இல்லாத பகுதிகளை பிரதானச் சாலைகளுடன் இணைப்பதற்கு வசதியாக சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில், 69 வழித்தடங்களில் 150 சிற்றுந்துகள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள், மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

## 4.5 மகளிர் சிறப்புப் பேருந்துகள்

சென்னையில் பரபரப்பான நேரங்களில் மகளிர் மற்றும் சிறுவர்கள் பயன்பெறும் வகையில் மாநகர் போக்குவரத்துக் கழகம் 56 வழித்தடங்களில் 210 மகளிர் மற்றும் சிறுவர்கள் சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

### 4.6 மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்துகள்

மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக 13 நட்பு பேருந்துகள் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டு மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன.

### 4.7 மலைப்பகுதிகளில் சிற்றுந்துகள்

மலைப்பகுதிகளில் குறுகலான பாதைகளினால் போக்குவரத்து வசதியில்லாத இடங்களில் ரூ.35 கோடி செலவில் மலைப்பகுதிகளுக்காக 208 சிற்றுந்துகளை வாங்குவதற்கு இவ்வரசு ஆணையிட்டுள்ளது. இதுவரையில், 79 சிற்றுந்து சேவைகள் அப்பகுதிகளில் இயக்கப்பட்டு வருகின்றன.

### 4.8 கழிவறை வசதியுடன் கூடிய பேருந்து

கழிவறை வசதிகளுடன் கூடிய 60 பேருந்துகள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

### 4.9 விழாக்காலச் சிறப்புப் பேருந்துகள்

தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய விழாக்காலங்களில் இயக்கப்படும் பேருந்துகளின் மூலம் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் குறிப்பிடத்தக்க வருவாயை ஈட்டியுள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளில் இயக்கப்பட்ட சிறப்பு நடைகள் மற்றும் அவற்றின் வருவாய் விவரங்கள் பின் வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பண்டிகை | இயக்கப்பட்ட சிறப்பு நடைகளின் எண்ணிக்கை | ஈட்டிய மொத்த வருவாய் |
|---|---|---|---|
| 2012–2013 | தீபாவளி<br>பொங்கல் | 7,958<br>7,135 | 87.37<br>89.70 |
| 2013–2014 | தீபாவளி<br>பொங்கல் | 10,484<br>9,546 | 86.93<br>93.41 |
| 2014–2015 | தீபாவளி<br>பொங்கல் | 10,499<br>8,548 | 83.96<br>81.86 |
| 2015–2016 | தீபாவளி<br>பொங்கல் | 15,540<br>7,160 | 83.92<br>90.51 |
| 2016–2017 | தீபாவளி<br>பொங்கல் | 15,033<br>13,337 | 85.75<br>95.05 |
| 2017–2018 | தீபாவளி<br>பொங்கல் | 14,113<br>13,407 | 89.36<br>75.80 |
| 2018–2019 | தீபாவளி<br>பொங்கல் | 11,503<br>11,914 | 101.24<br>109.53 |
| 2019–2020 | தீபாவளி<br>பொங்கல் | 11,288<br>12,981 | 98.28<br>129.37 |

## 4.10 தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் **16,888** போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் இரத்ததானம் செய்வதற்குத் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

### 4.11 பாலூட்டும் தாய்மார்களுக்கான அறை

பயணம் செய்யும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவிடும் பொருட்டு, பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தனி அறை அமைக்குமாறு அரசு ஆணையிட்டது. அதன்படி, பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 4.12 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 3 x 2 இருக்கை வசதியுடன் கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகம்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் 240 குளிர்சாதனப் பேருந்துகள், மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் 48 குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் அரசு போக்குவரத்துக் (கும்பகோணம்) கழகத்தால் இயக்கப்படும் இரண்டு குளிர்சாதன நகர் பேருந்துகள் ஆகியவற்றை தவிர அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் 3 x 2 இருக்கை வசதியுடன் கூடிய 100 குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 4.13 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் படுக்கை வசதியுடன் கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகம்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் படுக்கை வசதியுடன் கூடிய 34 குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 106 குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதிகளுடன் கூடிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## அத்தியாயம்–5

## பயணக் கட்டணச் சலுகை

### 5.1 பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படும் பயனாளிகளின் வகைகள் பின்வருமாறு

i. நாடாளுமன்ற / சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள்.

ii. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் / ஊடக நபர்கள்.

iii. மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.

iv. புற்று நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் (காதுகேளாதோர், வாய்பேசாதோர், பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்).

v. நாடகக் கலைஞர்கள்

vi. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள்

vii. மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை– 21.02.2016 முதல் குளிர்சாதன பேருந்துகளை தவிர்த்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும்.

### 5.2 மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்

பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் கட்டணமில்லாப் பயணச் சலுகை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) வழங்கப்பட்டு வருகிறது.

இச்சலுகைக்கானத் தொகையினை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

i) அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை.

ii) தேசிய குழந்தை மற்றும் தொழிலாளர் திட்ட நலப்பள்ளி.

iii) அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.

iv) அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

v) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.

மேற்கண்ட சலுகை 2013–14–ஆம் ஆண்டு முதல் பின்வரும் கல்வி நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இச்சலுகைக்கானத் தொகையை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

சமுதாயக் கல்லூரிகள்.
அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
இசைக் கல்லூரிகள்.
சென்னை மாநகராட்சித் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

## 5.3 50% பயணக் கட்டணச் சலுகை

| | |
|---|---|
| தனியார் கல்லூரிகள்<br>தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்<br>தனியார் பொறியியல் கல்லூரிகள் | அரசு அங்கீகாரம் பெற்றவை |

## 5.4 மாற்று அனுமதிச் சீட்டுகள்

சென்னை மாநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்கள் தங்கள் இல்லத்திலிருந்து நூலகம் சென்று வர 60 மாற்று அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

## 5.5 மாணவர்களுக்கு பேருந்து பயணச் சலுகைக்கான செலவினத்தை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுசெய்தல்

2011 – 2012 முதல் 2019 – 2020 வரை பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சிக் கூடங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பேருந்துப் பயணக் கட்டணச் சலுகை அட்டைகள் வழங்கியதால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யும் வகையில் அரசால் வழங்கப்பட்ட நிதி விவரங்கள் பின்வருமாறு :

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | ஆண்டு | தொகை |
|---|---|---|
| 1. | 2011-2012 | 438.97 |
| 2. | 2012-2013 | 452.52 |
| 3. | 2013-2014 | 452.96 |
| 4. | 2014-2015 | 448.00 |
| 5. | 2015-2016 | 480.00 |
| 6. | 2016-2017 | 505.35 |
| 7. | 2017-2018 | 541.78 |
| 8. | 2018-2019 | 764.72 |
| 9. | 2019-2020 (ஜனவரி 2020 வரை) | 1010.05 |
| | **மொத்தம்** | **5094.35** |

## 5.6 இணையவழி முன்பதிவு

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவும் வகையில் இணையவழி மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை 03.10.2011 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2019–2020–ஆம் ஆண்டில் (ஜனவரி 2020 வரை) மொத்த முன்பதிவில் இணையவழி முன்பதிவு 69.17 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## 5.7 விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச் சீட்டுகள்

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளிலுள்ள அரசு நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் மாதாந்திரப் பயணச் சீட்டானது, ஒரு சீட்டுக்கு ரூ.1,000/– கட்டண விகிதத்தில் விருப்பம் போல் பயணம் செய்ய பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன.

## 5.8 மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை

மாநகர் மற்றும் நகரப் பகுதிகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக நடைமுறையில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகையானது, 2013–2014–ஆம் ஆண்டு முதல் புறநகர் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் புறநகர் பேருந்துகளில்

தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

### 5.9 குழுப் பயணச் சீட்டு சலுகை

**2013–14**–ஆம் ஆண்டு முதல் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் **10** அல்லது அதற்கு மேற்பட்ட பயணிகள் குழுவாக முன்பதிவு செய்யும்போது பயணக்கட்டணத்தில் **10** சதவீதம் கட்டணக் கழிவுத் தொகை வழங்கப்படுகிறது. இச்சலுகையின் மூலம் **30, 477** குழுப் பயணச்சீட்டுகள் இதுவரையில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. **31.01.2020** அன்றுள்ளவாறு, **3,94,264** பயணிகள் ரூ.**130.89** இலட்சத்திற்கு சலுகை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

### 5.10 மின்னணுப் பயணச்சீட்டு வழங்கும் கருவிகள்

போக்குவரத்துக் கழகங்கள் தங்களின் இயக்கச் செயல்பாட்டுத் திறனை வளர்த்துக் கொள்ளவும், கணக்கீட்டை உறுதி செய்யும் பொருட்டு அரசு பேருந்துகளில் புவி இருப்பிட முறைமையை **(GPS)** அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்ப மின்னணுப் பயணச்சீட்டு கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை பயணிகளுக்கும் நடத்துநர்களுக்கும் உதவியாக உள்ளதோடு, நடத்துநர்கள் பயணச்சீட்டு வழங்குவதற்கும், கணக்கிடுவதற்கும் எளிதாக உள்ளது. இதற்காக ரூ.**31.66** கோடி அரசால் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், அனைத்து அரசுப்

போக்குவரத்துக் கழகங்களிலும் **16,282** மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 5.11 புற்று நோயாளிகளுக்கான பயணக் கட்டணச் சலுகை

மிகவும் ஏழ்மையான மற்றும் கிராமப்புறங்களிலிருந்து சிகிச்சைக்காக புற்றுநோய் மருத்துவமனைக்கு வரும் புற்றுநோயாளிகளின் நிதி நெருக்கடியைக் குறைப்பதற்காக அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்யும் நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு உதவிக்கு வருகின்ற ஒரு நபருக்கும் அரசு பயணச்சலுகை வழங்கி வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், புற்றுநோயாளிகளுக்கு வழங்கிவரும் பயணச் சலுகைத் தொகையை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு ஈடு செய்து வருகின்றது. அதன் விவரம் பின்வருமாறு:

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | தொகை |
|---|---:|
| 2014-15 | 0.1800 |
| 2015-16 | 0.1800 |
| 2016-17 | 1.0218 |
| 2017-18 | 0.5857 |
| 2018-19 | 0.6775 |
| 2019-20 | 0.8626 |
| 2020-21 | 0.8626 |

## அத்தியாயம்–6

## வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள்

### 6.1 கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில்நுட்ப முறையில் ஏலமிடுதல்

கழிவு செய்யப்பட்ட அரசு பேருந்துகளுக்கு சிறந்த விலை கிடைக்கும் பொருட்டு, அவற்றை மின்னணு தொழில்நுட்ப முறையில் ஏலமிட மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி (M/s. MSTC) சேவை நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பயனாக, கடந்த ஒன்பது ஆண்டுகளில் (2011–2020) (ஜனவரி 2020 வரை) 8,410 வாகனங்களை கழிவு செய்ததில் போக்குவரத்துக் கழகங்கள்ரூ.108.85 கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

### 6.2 விளம்பரங்கள் மூலம் வருவாய்

கடந்த ஒன்பது ஆண்டுகளில், போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகளில் விளம்பரத்திற்கான பலகைகள் வைக்கப்பட்டு அதன் மூலமாக ரூ.136.68 கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

### 6.3 பயணவழி உணவகங்கள்

தொலைத்தூர வழித்தடங்களில் பயணிகளுக்கு சிறப்பான வசதி அளிக்கும் பொருட்டு, தமிழகம் முழுவதும் 22 இடங்களில் பேருந்துகளை நிறுத்த கூடுதல் இடவசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, நவீன சமையல் கூடம், உணவு அருந்தும் இடம், தரமான உணவு மற்றும் சுகாதாரமான கழிப்பிட வசதி போன்றவை உள்ள

பயணவழி உணவகங்கள் மூலமாக உணவு மற்றும் சிற்றுண்டி நியாயமான விலையில் வழங்கப்படுகிறது. இதன் மூலம், கடந்த ஒன்பது ஆண்டுகளில் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் ரூ.29.56 கோடி வருவாய் ஈட்டியுள்ளன.

### 6.4 சிப்பஞ்சல் மற்றும் விரைவுத் தூதஞ்சல் சேவை

அரசுப் பேருந்துகளில் சிப்பஞ்சல் (Parcel services) மற்றும் விரைவுத் தூதஞ்சல் (Courier services) சேவைகள் மூலமாக கடந்த ஒன்பது ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.4.93 கோடி வருவாய் ஈட்டியுள்ளன.

### 6.5 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் சீரமைப்பு மற்றும் சிக்கன நடவடிக்கைகள்

அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்கம் மற்றும் நிதித் திறன்களை அதிகரித்தல், மூலதனங்களை சிறப்பாக பயன்படுத்துதல், சொத்துக்களை உகந்த வழியில் பயன்படுத்துதல் மற்றும் செலவினங்களை குறைக்கும் பொருட்டு மாற்று ஏற்பாடுகள் கண்டறிதல், சீரமைப்பு மற்றும் சிக்கன நடவடிக்கைகளை அரசால் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில் அரசு போக்குவரத்துக் கழகங்களில் செலவுகளை குறைக்கவும் மற்றும் வருவாய் திறன்களை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## அத்தியாயம்–7

## பணியாளர்களின் நலன்களுக்கான நடவடிக்கைகள்

**7.1** அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் மொத்தம் **1,26,089** பணியாளர்களைக் கொண்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ.எண். | பிரிவு | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மேலாண்மை அலுவலர்கள் | 522 |
| 2. | அலுவலக மேற்பார்வையாளர்கள் | 641 |
| 3. | நிர்வாகப் பணியாளர்கள் | 4,333 |
| 4. | தொழிற்நுட்ப மேற்பார்வையாளர்கள் | 1,652 |
| 5. | தொழில்நுட்ப பணியாளர்கள் | 15,584 |
| 6. | போக்குவரத்து மேற்பார்வையாளர்கள் | 1,555 |
| 7. | ஓட்டுநர்கள் | 52,022 |
| 8. | நடத்துநர்கள் | 49,780 |
| | **மொத்தம்** | **1,26,089** |

### 7.2 காலிப் பணியிடங்களை நிரப்புதல்

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் **2011–2012** முதல் 2019-**2020** வரை கீழ்க்கண்டவாறு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

| ஆண்டு | சேம ஓட்டுநர் | சேம நடத்துநர் | தொழில் நுட்பம் | கருணை அடிப்படையிலான பணி நியமனம் | மொத்தப் பணி நியமனம் |
|---|---|---|---|---|---|
| **2011–2020** (ஜனவரி 2020 வரை) | **15,588** | **15,200** | **4,781** | **2,354** | **37,923** |

## 7.3 அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பணி வரன்முறை செய்தல்

கடந்த ஒன்பது ஆண்டுகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த ஓட்டுநர், நடத்துநர் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு:

| ஓட்டுநர் | நடத்துநர் | தொழில் நுட்பம் | மொத்தம் |
|---|---|---|---|
| 20,718 | 21,556 | 5,241 | **47,515** |

## 7.4 முழு உடற்பரிசோதனை

ஊழியர்களின் உடல் நலம் மற்றும் நல்வாழ்விற்கு இத்துறை மிகவும் முக்கியத்துவம் வழங்கி வருகிறது. இந்த நோக்கத்திற்காக, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 45 வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்களுக்கு முழு உடற்பரிசோதனைத் திட்டம் **2012–13–**ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம், **2013–14–**ஆம் ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## 7.5 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு பணப்பலன்கள்

2011–ஆம் ஆண்டிலிருந்து போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதியாக ரூ.1,652.97 கோடியும் மற்றும் ஓய்வு கால பணப் பலன்களாகிய பணிக்கொடை மற்றும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்திற்கு ரூ.3,326.31 கோடியும், ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பணிக்கொடை | | விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் | மொத்தம் | சேமநலநிதி | |
|---|---|---|---|---|---|---|
| | பணியாளர்–களின் எண்ணிக்கை | தொகை | | | பணியாளர்–களின் எண்ணிக்கை | தொகை |
| 2011–12 | 1,609 | 42.60 | 9.61 | 52.21 | 1,995 | 148.27 |
| 2012–13 | 2,292 | 82.10 | 17.17 | 99.27 | 3,229 | 61.90 |
| 2013–14 | 5,652 | 194.35 | 14.51 | 208.86 | 4,065 | 97.91 |
| 2014–15 | 1,664 | 68.76 | 2.16 | 70.92 | 4,490 | 129.59 |
| 2015–16 | 3,108 | 137.00 | 11.31 | 148.31 | 4,240 | 135.82 |
| 2016–17 | 2,491 | 182.90 | 61.83 | 244.73 | 3,810 | 138.18 |
| 2017–18 | 27,845 | 1,211.07 | 393.24 | 1,604.31 | 12,420 | 557.25 |
| 2018–19 | 3,527 | 204.91 | 102.54 | 307.45 | 5,147 | 101.08 |
| 2019–20 | 6,283 | 457.00 | 133.25 | 590.25 | 4,599 | 282.97 |
| **மொத்தம்** | **54,471** | **2,580.69** | **745.62** | **3,326.31** | **43,995** | **1,652.97** |

## 7.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி

போக்குவரத்து பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தினை செயல்படுத்த, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சியானது ஒருங்கிணைப்பு முகமையாக உள்ளது. போக்குவரத்து பணியாளருக்கு ஓய்வூதிய திட்டம் அரசால் **01.09.1998** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. **31.03.2003** அன்றும் அதற்கு முன்பும் பணியில் சேர்ந்த பணியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் வருவர். தற்போது, இத்திட்டத்தின்கீழ் **1.28** இலட்சம் பணியாளர்கள் உள்ளனர்.

## 7.7 ஓய்வூதியம் வழங்குதல்

கடந்த ஒன்பது ஆண்டுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி வழங்கிய ஓய்வூதியங்கள் விவரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | ஆண்டு | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட ஓய்வூதியம் |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 39,928 | 274.60 |
| 2. | 2012-13 | 44,811 | 382.33 |
| 3. | 2013-14 | 50,103 | 525.48 |
| 4. | 2014-15 | 55,300 | 596.67 |

| **வ. எண்.** | **ஆண்டு** | **ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட ஓய்வூதியம்** |
|---|---|---|---|
| 5. | 2015-16 | 60,729 | 800.76 |
| 6. | 2016-17 | 65,855 | 865.83 |
| 7. | 2017-18 | 70,907 | 963.42 |
| 8. | 2018-19 | 76,663 | 1086.83 |
| **9.** | 2019-20 (ஜனவரி 2020 வரை) | 81,738 | 1,100.13 |

ஏப்ரல் **2018** முதல் மார்ச் **2019** வரை ஓய்வு பெற்ற போக்குவரத்து பணியாளர்களுக்கு சட்டரீதியான பணப்பலன்களை வழங்க அரசால் **2019–20** நிதியாண்டில் கீழ்க்கண்ட நிதியினை வழங்கியுள்ளது**.**

**(ரூபாய் கோடியில்)**

| **வ. எண்.** | **சட்ட ரீதியான பணப்பலன்கள்** | **தொகை** |
|---|---|---|
| 1. | சேமநல நிதி | 282.97 |
| 2. | பணிக்கொடை | 457.00 |
| 3. | விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் | 133.25 |
| 4. | ஓய்வூதிய ஒப்படைப்பு | 207.08 |
| 5. | பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம் (C.P.S) | 12.70 |
| | **மொத்தம்** | **1,093.00** |

**7.8 நலத்திட்டங்கள்**

போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலன் கருதி, பின்வரும் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

i. பணிக்கால அடிப்படையிலான சிறப்பு ஊதிய உயர்வு / ஆய்வுப் பலன்கள்.
ii. விடுப்புப் பலன்கள்
iii. திருப்பான் படி (Steering Allowance)
iv. கல்வி உதவித்தொகை.
v. சலுகைக் கட்டண உணவக வசதி.
vi. இலவசச் சீருடைகள் மற்றும் சலவைப்படி.
vii. திருமணக் கடன்.
viii. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்.
ix. இறுதிச் சடங்குச் செலவுகள்.
x. மாணவர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சென்றுவரக் கட்டணமில்லா பயண அனுமதிச்சீட்டு மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு ஆண்டிற்கு 5,500 கி.மீட்டர்.
xi. குடும்பநல நிதி.
xii. கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமரியில் விடுமுறை விடுதிகள்.
xiii. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (தமிழ்நாடு அரசு ஊழியர்கள் பயன்படுத்துவது போல).
xiv. பண்டிகை முன்பணம் ரூபாய் 10,000/–.

## 7.9 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்

(அ) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க, தரமான அடிப்படை வசதிகளுடன் கூடிய ஓய்வறைகள் ரூ.7.38 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பணிமனைகளில் கான்கீரிட் தளம், பேருந்துகளின் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக் கூடம் ஆகியவை ரூ..38.43 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## 7.10 ஓட்டுநர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்

ஓட்டுநர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள தொடர்ச்சியான புத்தாக்கப் பயிற்சி அளிப்பதன் மூலம் விபத்தில்லா பயணம் என்ற இலக்கை அடையலாம். எனவே, இத்துறை கீழ்க்கண்ட சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது:—

1. ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு நவீனமுறைக் கற்பித்தல் மற்றும் பயிற்சி வசதிகளுடன் கூடிய மேம்பட்ட ஒரு கனரக வாகன ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், கும்மிடிப்பூண்டியிலுள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் ரூ.15 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

2. மன அழுத்தத்தை குறைக்கவும், விபத்தில்லா பயணத்தை உறுதி செய்ய ஓட்டுநர்களுக்கு தொடர் மறுபயிற்சி அளிக்கப்படுகிறது.

3. சென்னை, திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவி மூலம் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

4. தமிழ்நாட்டில் 7 இடங்களில் 16 ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் மூலம் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன.

# அத்தியாயம் 8

# துறைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு

## விமான மற்றும் ரயில் இணைப்பு

**8.1** போக்குவரத்து துறை, தென்னக இரயில்வே மற்றும் விமான போக்குவரத்து அமைச்சகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இரயில் மற்றும் விமான நிலையங்களின் விரிவாக்க திட்டங்களுக்கு முகமை துறையாக செயல்படுகிறது. இத்துறையானது தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் இரயில்வே மற்றும் விமான நிலையங்களின் திட்டத்திற்காக தேவைப்படும் நிலங்களை மாவட்ட ஆட்சி தலைவர்கள் மற்றும் நில நிர்வாக ஆணையரின் ஒத்துழைப்புடன் கையகம் செய்வதில் முக்கிய பங்கு வகுக்கிறது.

### 8.2 விமான நிலைய விரிவாக்கத் திட்டங்களுக்கான நில எடுப்பு பணிகள்

சென்னை விமான நிலையத்தை விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்குவதற்கும் மற்றும் பெருநகர் அல்லாத விமான நிலையங்களான (Non-Metro Airports) மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய விமான நிலையங்களை விரிவாக்கம் செய்ய நிலம் எடுப்பு பணிகள் நடைப்பெற்றுவருகின்றன. மேற்கண்ட விமான

நிலையங்களின் விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலங்கள், விமான நிலையங்கள் ஆணையத்திற்கு எந்தவித வில்லங்கமும் இன்றி இலவசமாக வழங்கப்படுகிறது.

| **வ. எண்.** | **திட்டத்தின் பெயர்** | **நில எடுப்பு பணிகளின் தற்போதைய நிலை** |
|---|---|---|
| i. | சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசு **129.82** ஏக்கர் நிலங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு ஏற்கனவே வழங்கியுள்ளது. மேலும், சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டம் தொடர்பாக பல்வேறு வசதிகள் ஏற்படுத்துவதற்காக **100.61** ஏக்கர் நிலங்கள் கூடுதலாக தேவைப்படுவதாக இந்திய விமான நிலையங்கள் ஆணையம் தெரிவித்துள்ளது.<br><br>மேற்கண்ட நில எடுப்பு பணிகள் இறுதிகட்டத்தை அடைந்துள்ளன. விரைவில் அந்நிலங்கள் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும்.<br><br>மேலும், **8.50** ஏக்கர் இராணுவ நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு மாற்றுவது தொடர்பாக பாதுகாப்பு துறை அமைச்சகத்திடம் கலந்து ஆலோசித்து அதற்கான நடவடிக்கைகள் தனியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு பணிகளின் தற்போதைய நிலை |
|---|---|---|
| ii | மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக **466.43** ஏக்கர் பட்டா நிலங்களை நில எடுப்பு செய்யவும் **149.49** ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும் ஆக மொத்தம் **615.92** ஏக்கர் நிலங்களை நில எடுப்பு செய்ய நிர்வாக அனுமதி தமிழக அரசு வழங்கியுள்ளது.<br><br>நில எடுப்புக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு நில மதிப்பு நிர்ணயம் செய்யும் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. நில உரிமையாளர்களுக்கு இடைக்கால இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு ரூ.**166.69** கோடி தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், மதுரை விமான நிலைய விரிவாக்கம் தொடர்பாக மாற்று சுற்றுச்சாலை அமைப்பதற்கு தேவையான **160.32** ஏக்கர் நிலங்களை கையகம் மற்றும் நில உரிமை மாற்றம் செய்வதற்கும் அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. |
| iii. | கோயம்புத்தூர் விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசு **490.27** ஏக்கர் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்யவும் மற்றும் **134.58** ஏக்கர் இராணுவ நிலங்களை நிலமாற்றம் செய்யவும் நிர்வாக அனுமதி |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு பணிகளின் தற்போதைய நிலை |
|---|---|---|
| | | வழங்கியுள்ளது. நேரடி பேச்சுவார்த்தையின் மூலம் நிலங்கள் நில எடுப்பு செய்யப்பட்டு, நிலங்களின் மதிப்பு மாநில அளவிலான நேரடி பேச்சுவார்த்தை குழுவின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><br>நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்குவதற்காக இதுவரையில் ரூ.269.18 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. |
| iv. | திருச்சிராப்பள்ளி விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசு 345.62 ஏக்கர் நிலங்களை நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் செய்ய நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. நில எடுப்பு பணிகள் நடைப்பெற்று வருகின்றன.<br><br>மேலும், திருச்சிராப்பள்ளி விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு தேவைப்படும் 164.68 ஏக்கர் இராணுவ நிலங்களை நில மாற்றம் செய்திட தனியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| v. | சேலம் விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | சேலம் விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக தமிழக அரசு 535.10 ஏக்கர் பட்டா நிலங்களை நில எடுப்பு செய்யவும், 32.33 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும் ஆக மொத்தம் 567.43 ஏக்கர் |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு பணிகளின் தற்போதைய நிலை |
|---|---|---|
| | | நிலங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. நில எடுப்பு பணிகள் தற்பொழுது நடைப்பெற்று வருகின்றன. மேலும் மண்டலங்களுக்குள் இடையேயான விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் கீழ் சேலம் விமான நிலையத்திலிருந்து 25.03.2018 முதல் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. |
| vi. | தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசு 605.77 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தவும் / நில உரிமை மாற்றம் செய்யவும் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட நில எடுப்பு பணிகள் முடிவுற்று நிலங்கள் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு ரூ.16.91 கோடி தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தூத்துக்குடி விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்க்காக தெறி சாலையை மாற்றியமைப்பதற்கு கூடுதலாக 96.79 ஏக்கர் நிலங்கள் தேவைப்படுவதாக இந்திய விமான நிலையங்கள் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது. |

## 8.3 மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டம்

குறைந்த விலையில் விமான பயணத்தை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசின் விமான போக்குவரத்து அமைச்சகம், மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தினை (உதான்) அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைந்த பயன்பாட்டில் உள்ள 13 விமான நிலையங்கள் தமிழ் நாட்டில் கண்டறியப்பட்டுள்ளன.

தமிழக அரசு, மத்திய அரசின் விமான போக்குவரத்து அமைச்சகத்துடன் 08.06.2017 அன்று மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்காக, புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின்கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு பின்வரும் சலுகைகள் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன.

- இத்திட்டத்தின்கீழ் இயங்கும் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களுக்கு வழங்கப்படும் விமான எரிபொருளுக்கான (Air Turbine Fuel) மதிப்பு கூட்டு வரி ஒரு சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

- 20 சதவீத சாத்தியகூறு இடைவெளி நிதி (Viability Gap Fund) தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் மூலம் விமான இயக்கும் நிறுவனத்திற்கு (Airline Operators) வழங்கப்பட்டு வருகிறது.

- உதான் திட்டத்தின்கீழ் செயல்பாட்டிற்கு வரும் ஒவ்வொரு விமான நிலையத்திற்கும் 50% இருக்கைகளேனும் ரூ.2,500/–க்கு விற்பனை செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு நிபந்தனையுடன் கூடிய உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## அ) சேலம் விமான நிலையம்

சேலம் விமான நிலையத்திலிருந்து 25.03.2018 முதல் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இது பயணிகளிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

**ஆ) நெய்வேலி விமான நிலையம்**

நெய்வேலி விமான நிலையத்தில் விமானங்களை இயக்குவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் தயாராக உள்ளன. விமான போக்குவரத்து இயக்குனரகத்தின் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விமான நிலையத்திலிருந்து விமானங்கள் விரைவில் இயக்கப்படும்.

**இ) ஓசூர் விமான நிலையம்**

மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் கீழ் ஓசூர் விமான நிலையத்தை மேம்படுத்த தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**ஈ) வேலூர் விமான நிலையம்**

இரண்டாம் உலகப்போரின் போது இருந்த வேலூர் விமான நிலையத்தினை தற்போது விரிவுபடுத்திட 62.61 ஏக்கர் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்திட அரசு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நில எடுப்பு பணிகள் மற்றும் மாநில நெடுஞ்சாலையை மாற்றியமைக்கும் பணிகள் தற்பொழுது நடைப்பெற்று வருகின்றன.

(உ) **இராமநாதபுரம்** மற்றும் **தஞ்சாவூர்** விமான நிலையங்களை விமான போக்குவரத்து அமைச்சகத்தின் மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தவும் நடவடிக்கைக்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## 8.4 தமிழ்நாட்டில் உள்ள இரயில்வே திட்டங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் பாலக்காடு இரயில்வே கோட்டத்தின் சில பகுதிகள் தென்னக இரயில்வேயின் கட்டுப்பாட்டில் உள்ளன. தமிழக அரசின் போக்குவத்துத் துறை தென்னக இரயில்வே திட்டங்களான புதிய வழித்தடங்கள், இரட்டை இரயில் பாதை திட்டங்கள் மற்றும் அகலப்பாதை திட்டங்களுக்கு தேவைப்படும் நிலங்களை கையகம் செய்துதருகிறது.

தற்பொழுது நடைபெற்று வரும் புதிய வழித்தடங்கள் மற்றும் இரட்டை இரயில் பாதை திட்டங்களுக்கான நில எடுப்பு பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| i. | மீளவிட்டான் – மேலமருதூர் (மதுரை – தூத்துக்குடி (வழி அருப்புக்கோட்டை) புதிய அகல இரயில் பாதை திட்டம். | • இப்புதிய இரயில் பாதை இப்பகுதியிலுள்ள துறைமுகங்கள் மற்றும் புதியதாக செயல்படுத்தப்பட உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கு முக்கிய இணைப்புத் தடமாக இருக்கும்.<br>• தூத்துக்குடி மாவட்டத்தில் 15 கிராமங்களில் உள்ள 71.08.67 ஹெக்டேர் நிலங்கள் கையகம் செய்யப்பட்டு இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது இருப்புப்பாதை அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. |
| ii. | விழுப்புரம் – திண்டுக்கல் இரட்டை அகல இரயில் பாதை மற்றும் மின்மயமாக்கல் திட்டம். | • இத்திட்டம் தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை இணைக்கும் மதிப்புமிக்க திட்டமாகும். இத்திட்டம் அதிக பயணிகளின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் திட்டமாகும்.<br>• இத்திட்டத்திற்காக அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், திண்டுக்கல், கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாவட்டங்களிலுள்ள நிலங்களை நிலஎடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br>• நில எடுப்பு பணிகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளன. நிலங்கள் விரைவில் இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்படும். |

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| iii. | ஓமலூர் – மேட்டூர் அணை இரட்டை அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்திற்காக சேலம் மாவட்டத்தின் **15** கிராமங்களிலுள்ள **29.20.0** ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகள் முடிவுற்று நிலங்கள் இரயில்வே துறையிடம் வழங்கப்பட்டுள்ளது. |
| iv. | சின்ன சேலம் – கள்ளக்குறிச்சி அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்திற்காக விழுப்புரம் மாவட்டத்தின் **11** கிராமங்களிலுள்ள **48.04.00** ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன. நிலங்கள் விரைவில் தென்னக இரயில்வேயிடம் வழங்கப்படும். |
| v. | திண்டிவனம் – நகரி புதிய அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்திற்காக, திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய **4** மாவட்டங்களில் **682.71.41** ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நில எடுப்பு பணிகள் விரைந்து முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலங்கள் விரைவில் தென்னக இரயில்வேயிடம் வழங்கப்படும். |

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| vi. | திண்டிவனம் – திருவண்ணாமலை புதிய அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்தில் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 2 மாவட்டங்கள் கவரப்படுகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் 31.36.04 ஹெக்டேர் நிலங்கள் நிலஎடுப்பு செய்யப்பட்டு இரயில்வே துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 43.26.5 ஹெக்டேர் நிலங்களுக்கான நிலஎடுப்பு பணிகள் நடவடிக்கையில் உள்ளது.<br>• விழுப்புரம் மாவட்டத்தில் 183.44.5 ஹெக்டேர் நிலங்களை நிலஎடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகள் நடவடிக்கையில் உள்ளது. |
| vii. | சென்னை கடற்கரை – கொருக்குபேட்டை மற்றும் கொருக்குபேட்டை – எண்ணூர் இடையே 3வது மற்றும் 4வது இரயில் பாதை அமைக்கும் திட்டம். | • இவ்வழித்தடம் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வழியாக செல்கிறது. இந்த இரயில் பாதை சென்னை கடற்கரை – கும்மிடிப்பூண்டி பிரிவில் புறநகர் போக்குவரத்தை அதிகரிக்க உதவுகிறது.<br>• சென்னை மாவட்டத்தில் மூன்று கிராமங்களில் உள்ள 15890.5 சதுர மீட்டர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளன. |
| viii. | மதுரை – தூத்துக்குடி | • இவ்வழித்தடம் மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் வழியாக செல்கிறது. |

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| | இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம். | • மேற்கண்ட மாவட்டகளில் உள்ள **89.47.43** ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.<br>• இத்திட்டத்திற்காக நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br>• நில எடுப்பு பணிகள் நடைப்பெற்றுவருகின்றன. |
| ix. | கன்னியாகுமரி – திருவனந்தபுரம் இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம். | • கன்னியாகுமரி மாவட்டத்தில் **4.37.75** ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நில எடுப்பு பணிகள் நடைப்பெற்றுவருகின்றன. |
| x. | மணியாச்சி – நாகர்கோவில் இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம். | • இத்திட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய **3** மாவட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள **100.33.67** ஹெக்டேர் நிலங்களை கையகம் செய்யவும் மற்றும் நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்பு பணியாளர்களை நியமனம் செய்யவும் அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.<br>• நில எடுப்பு பணிகள் நடைப்பெற்றுவருகின்றன. |

# அத்தியாயம்–9

## அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

### 9.1 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை

மாநகர் போக்குவரத்துக் கழகம் தனியுரிமை பெற்று சென்னை நகரில் பேருந்துகளை இயக்கும் நிறுவனமாகும். மாநகர் போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைமையகம் பல்லவன் சாலையில் உள்ள பல்லவன் இல்லத்தில் அமைந்துள்ளது. இக்கழகம் சென்னை பெருநகர் மற்றும் அதனை ஒட்டியுள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலும் நகரப் பேருந்துகளை இயக்குகிறது.

- இப்போக்குவரத்துக் கழகம் **33** பணிமனைகளையும், **3,614** பேருந்துகளை கொண்டு **3,439** சேவைகளை **582** வழித்தடங்களில் இயக்கி வருகின்றது. இதன் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை **22,277** ஆகும். இக்கழகம் சாதாரண பேருந்து, விரைவு பேருந்து, சொகுசு பேருந்து, குளிர்சாதன பேருந்து ஆகியவைகைள இயக்கி வருகின்றது. இக்கழகத்தின் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு குரோம்பேட்டையில் அமைந்துள்ளது.
- மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் அவர்கள், பேருந்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பணிமனைகளை

உயர்த்த ஆணையிட்டுள்ளார். அதற்கிணங்க அறிவிக்கப்பட்ட 12 புதிய பணிமனைகளில், பாடியநல்லூர், கண்ணகி நகர், மகாகவி பாரதி நகர், பெசன்ட் நகர், ஆதம்பாக்கம், குரோம்பேட்டை– 2, குன்றத்தூர், பெரும்பாக்கம் ஆகிய இடங்களில் 8 புதிய பணிமனைகள் திறக்கப்பட்டடு செயல்பாட்டில் உள்ளது. மேலும், வேளச்சேரி, தையூர், கும்மிடிப்பூண்டி மற்றும் தாமரைப்பாக்கம் ஆகிய 4 புதிய பணிமனைகளுக்கு தேவையான நிலங்களைக் கண்டறிந்து நில ஒதுக்கீடு உரிமை பெற விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

- இப்போக்குவரத்துக் கழகத்தால் 48 குளிர்சாதன பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட வழித்தடத்தில் 10.01.2020 முதல் இயக்கப்படுகின்றது.

- சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இயக்கப்படும் மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் வாகன நகர்வு இயக்கத்தை கண்காணிக்க ஏதுவாக கண்காணிப்பு கேமரா மற்றும் இதனுடன் அவசர கால பொத்தான்கள் பொருத்துவதற்கும் நடுவண் அரசின் 60% நிதி பங்களிப்பும் மற்றும் மாநில அரசு 40% நிதி பங்களிப்புடன் நிர்பையா நிதியின் மூலம் இத்திட்டத்தினை நிறைவேற்ற இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

- இக்கழகம், நிர்பையா நிதியின் மூலம் ஆயிரம் மகளிருக்கு இலகுரக வாகன ஓட்டுனர் பயிற்சி மற்றும் 500 மகளிருக்கு கனரக வாகனப் பயிற்சி அளிப்பதற்கு உத்தேசித்துள்ளது. மகளிர் பாதுகாப்பு தொடர்பாக ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு பயிற்சி

வழங்குவது, பொது தொலைபேசி எண் வழங்குவது மற்றும் பேருந்து முனையங்களில் தொடுதிரையை பயன்படுத்தி குறைகளை தெரிவிக்கும் வசதி ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.8.92 கோடியாகும்.

• மின்னணுப் பயணச்சீட்டுக் கருவியின் மூலம் பொதுப் போக்குவரத்து பயண அட்டையை அனைத்து பேருந்துகளிலும் பயன்படுத்தி பணமில்லா பரிவர்த்தனை இக்கழத்தால் ரூ.76.12 கோடி மதிப்பீட்டில் அறிமுகம் செய்யப்படும். இத்திட்டம், நடுவண் அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் பொதுப் போக்குவரத்தில் நுண்ணறிவினை (Intelligent Public Transport System) பெருக்குவதற்கானத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும். இத்திட்ட மதிப்பீட்டில் 50% மாநில அரசின் பங்கும் 50% மத்திய அரசின் பங்குமாகும்.

• தற்போது உள்ள அலுவலக செயல்பாடுகள் அனைத்தையும் கணினி மயமாக்க (E-Governance) இக்கழகம் திட்டமிட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் பொருட்டு, நடுவண் அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் பொதுப் போக்குவரத்தில் நுண்ணறிவினை (Intelligent Public Transport System) பெருக்குவதற்கானத் திட்டத்தின்கீழ் விவரத் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடான ரூபாய் 22.72 கோடியில் 50% மாநில அரசும், 50% நடுவண் அரசும் வழங்கும்.

• இக்கழகத்தால், ஏற்கனவே 75 பேருந்துகளில் விளம்பரத்துடன் கூடிய பேருந்து நிறுத்தத்தின் பெயரை முன்னரே அறிவிப்பு செய்யும் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதத்திற்கு ஒரு பேருந்துக்கு ரூ.1,200/– வருவாய் ஈட்டப்படுகிறது. மேலும் இந்த வசதி அனைத்து பேருந்துகளிலும் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும்.

• இதர வருவாயினை பெருக்கிட முதற்கட்டமாக 10 பேருந்து நிலையங்களின் உள்ளே விளம்பரம் செய்யவும், மேலும் 400 பேருந்துகளில் பேருந்து முழுவதும் விளம்பரம் செய்யவும் இக்கழகத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

• பயணிகள் பேருந்து பற்றிய தகவல் பெறும் வகையில் இணைய தளம் மற்றும் கைபேசி பயன்பாடு (GPS மூலமாக) வடிவமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வசதியின் மூலம் வழித்தடங்களில் இயக்கப்பட்டு கொண்டிருக்கும் பேருந்துகளின் இருப்பிடம், பேருந்துகளின் வேகம் மற்றும் குறிப்பிட்ட பேருந்து நிறுத்தத்திற்கு வரும் நேரம் ஆகியவற்றினை பொது மக்கள் தங்கள் கைபேசி செயலி மூலம் அறியலாம்.

**பயணிகளுக்காக இக்கழகம் வழங்கும் கூடுதல் வசதிகள்**

- பணமில்லா பரிவர்தனை திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில், இக்கழகம் சலுகைப் பயணச்சீட்டு விற்பனை மையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Point of sale கருவிகள் மூலமாக பொதுமக்கள் சலுகைப் பயணச்சீட்டுகளை பெறலாம்.
- மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான 210 சிறப்புப் பேருந்துகள் சென்னை நகர் முழுவதும் இயக்கப்பட்டு வருகின்றன.
- மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் பேருந்துகளில் இலவசப் பயண வசதி 24.02.2016 அன்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன. சராசரியாக ஒரு நாளைக்கு 38,358 மூத்த குடிமக்கள் பயன் பெறுகின்றனர்.

## 9.2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் சென்னை

இக்கழகம் மாநிலத்திற்குள்ளும், மாநிலங்களுக்கு இடையேயும், பேருந்துகளை இயக்குகின்றது. இக்கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள பல்லவன் சாலையில் அமைந்துள்ளது. இக்கழகம் 1,231 பேருந்துகளை 22 பணிமனைகள் மூலம் இயக்குகின்றது. அவற்றில் அதிநவீன மிதவை பேருந்து, குளிர்சாதன பேருந்து, குளிர்சாதன படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை வசதி கொண்ட பேருந்து,

குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து மற்றும் கழிப்பறை வசதி மற்றும் உணவகப் பேருந்து போன்ற பேருந்துகள் அடங்கும். இந்நிறுவனத்தில் மொத்தம் 5,183 பணியாளர்கள் உள்ளன ர்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 251 வழித்தடங்களை இயக்கி வருகின்றது அவற்றில் தமிழ் நாட்டின் உட்பகுதிகளுக்கு 139 வழிதடங்களும் ஆந்திரம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களுக்கு 112 வழித்தடங்களும் இக்கழகத்தால் இயக்கப்படுகின்றன.

இந்திய ரயில்வே துறை மற்றும் விமான துறை ஆகியவைகளை போலவே இணைய தளம் (Online Resevertion) மூலமாக முன்பதிவு செய்யும் வசதி பயணிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் எந்த இடத்தில் இருந்தாலும் எந்த தடத்திற்கும் தமிழக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களிலும் பயணம் செய்ய உடனடி வழித்தட பதிவு திட்டம் மூலமாக பயணச்சீட்டு முன்பதிவு செய்யப்பட்டு வருகின்றது. 76 இடங்களில் 82 முன்பதிவு மையங்களின் மூலமாக முன்பதிவு செய்யப்படுகின்றன. முன்பதிவு செய்யப்பட்டப் பயணிகளுக்கு பேருந்து நடத்துனரின் பெயர் மற்றும் கைபேசி எண், குறுஞ்செய்தியாகப் பயணம் தொடங்க 30

நிமிடங்களுக்கு முன் அனுப்பப்படுகின்றது. இதன் மூலம் பேருந்து புறப்படும் நேரம் மற்றும் இடம் முதலியவற்றை பயணிகள் தெரிந்துக்கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் முதன் முதலாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் வயதானோர், மகளிர் மற்றும் நீரழிவு நோயாளிகளின் வசதிக்காக “கிளாசிக்” பேருந்து உணவகம் மற்றும் கழிப்பறை வசதியுடன் **20.06.2013** அன்று சென்னையிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பின் தற்பொழுது சென்னை - திண்டுக்கல், சென்னை - திருச்சிராப்பள்ளி, சென்னை - தஞ்சாவூர், சென்னை - மதுரை, சென்னை - சேலம், சென்னை – புதுச்சேரி, சென்னை - கோயம்புத்தூர், சென்னை - வேளாங்கண்ணி, சென்னை - கும்பகோணம் ஆகிய வழித்தடங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம், இக்கழகத்தால் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் **2.47** ஏக்கர் நிலப்பரப்பில் துவங்கப்பட்டு குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு ஒரு லிட்டர் குடிநீர் பாட்டில்கள் **234** சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட இடங்களில் **306** விற்பனை நிலையங்களின் மூலமாக ரூபாய் **10/–**க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தலைமையகத்திலுள்ள அலுவலர்கள், பேருந்து இயக்கம் தொடர்பாக பிற பணிமனையிலுள்ள கிளை மேலாளர்கள் மற்றும் பிற அலுவலர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளும் பொருட்டு ‘‘ஸ்கைப்’’ (SKYPE) வசதி செய்யப்பட்டுள்ளது. தலைமை அலுவலகம், பேருந்து நிலையம் போன்ற முக்கிய இடங்களை கண்காணிக்கவும் பயணிகள் போக்குவரத்தை கண்காணிக்கவும் ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

முக்கிய இடங்களுக்கு BRAND பெயர்களுடன் 50 ‘‘பிரீமியம் சர்வீஸ்கள்’’ (PREMIUM SERVICES) இயக்கப்படுகின்றன. முன்பதிவு செய்த பயணிகளின் நன்மைக்காக, கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற முக்கியமான நகரங்களில் குறிப்பிட்ட இடங்களில் ஏறும் வசதி (PICK UP POINTS) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர்முனையிலும் இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் எளிதாக பயணம் செய்யும் வகையில் 2019 தீபாவளி திருநாளின் போதும் 2020 பொங்கல் பண்டிகையின்

போதும் சிறப்புப் பேருந்துகள் தற்காலிக பேருந்து முனையங்களிலிருந்து பிரித்து இயக்கப்பட்டன.

மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் ஆணையின்படி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் பேருந்து நிலையங்களில் தாய்மார்கள் பாலூட்டும் அறைகள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் சிறப்பம்சங்கள் கொண்ட பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலம் விபத்தில்லா இயக்கம், இயக்கத்திறன் அதிகப்படுத்துதல் புதிய தொழில்நுட்ப மேம்பாடு, பராமரிப்பு நடைமுறைகள் மற்றும் மன அழுத்த மேம்பாடு ஆகியவற்றில் பல்வேறு துறைகளை சார்ந்த வல்லுனர்களை கொண்டு ஓட்டுனர், நடத்துனர் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

இக்கழகம் **2019–**2020-ஆம் நிதியாண்டில் **31.01.2020** வரை **582** புதிய பேருந்துகளை அறிமுகம் செய்துள்ளது. அவற்றில் **269** அதிநவீன மிதவை பேருந்துகளும், **50** குளிர்சாதன பேருந்துகளும், **113** குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்துகளும், **100** குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை

வசதி கொண்ட பேருந்துகளும் மற்றும் 50 கிளாசிக் பேருந்துகளும் அடங்கும்.

## 9.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் நகரை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம், நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் போக்குவரத்துச் சேவையை கண்காணித்து மேம்படுத்த விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இக்கழகத்திற்கு சொந்தமான பணிமனைகளின் எண்ணிக்கை 61 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 3,376 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 3,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 21,511 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு மற்றும் சொகுசு போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் மூன்று புதுப்பித்தல் பிரிவும், மூன்று டயர் புதுப்பித்தல் பிரிவும், மூன்று பேருந்து கூண்டு கட்டும் பிரிவும், பத்து

தகுதிச்சான்று பிரிவும், ஆறு ஓட்டுநர் பயிற்சி பள்ளியும், மூன்று ஏலப்பிரிவும் மற்றும் ஐந்து பயிற்சி மையமும் உள்ளன.

நெய்வேலி, ஓரிக்கை–1, ஓரிக்கை–2, சேத்துபட்டு, சின்னசேலம், பேரணாம்பட்டு, சோளிங்கர், திருக்கழுக்குன்றம், செங்கம், காட்டுமன்னார்கோவில் மற்றும் ஏலாத்துார் ஆகிய 11 இடங்களில் புதிய பணிமனைகள் அமைக்கப்படும் என மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததில், நெய்வேலி, ஓரிக்கை–1, சேத்துப்பட்டு, காட்டுமன்னார்கோயில், சின்னசேலம், பேர்ணாம்பட்டு, ஓரிக்கை 2 மற்றும் சோளிங்கர் ஆகிய இடங்களில் புதிய பணிமனைகளை பிப்ரவரி 2014 முதல் மார்ச் 2016 வரை பல்வேறு நாட்களில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. செங்கம் பணிமனை 04.03.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. எலத்துார் பணிமனை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. திருக்கழுக்குன்றத்தில் பணிமனை அமைக்க 5 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு பெயர் மாற்றம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2018-2019-ஆம் நிதியாண்டில் மொத்தம் 519 புதியப் பேருந்துகள் இக்கழகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. 2019-2020-ஆம்

நிதியாண்டில் **399** புதியப் பேருந்துகள் இக்கழகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

கூடுதல் வருவாய் ஈட்டும் பொருட்டு, இக்கழகம் அரசு எண்ணெய் நிறுவனங்களுடன் சேர்ந்து எரிப்பொருள் சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்காக **8** இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மக்கள் தீர்ப்பாயம்:**

வழக்குகளைக் குறைக்கும் பொருட்டு**,** இக்கழகம் **109** மோட்டார் விபத்து வழக்குகளுக்கு ரூ.**1,702.06** லட்சங்களை மக்கள் தீர்ப்பாயம் மூலம் வழங்கியுள்ளது.

**தனியார் ஓட்டுநருக்கான புத்தாக்கப் பயிற்சி:**

அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு பயிற்சி மையம் மூலம் புத்தாக்கப் பயிற்சி அளிப்பதை போன்று தனியார் ஓட்டுநர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சிகள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகின்றன.

- **2019** ஏப்ரல் முதல் **2020** ஜனவரி வரை **114** தனியார் கனரக வாகன ஓட்டுநர்களுக்கு **1** நாள் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- **2019** ஏப்ரல் முதல் **2020** ஜனவரி வரை **272** உயிர்ச்சேத விபத்து ஏற்படுத்திய தனியார் கனரக வாகன ஓட்டுநர்களுக்கு **2** நாட்கள் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு பேருந்துகள் இயக்கம்**

இக்கழக இயக்க பகுதிகளுக்குட்பட்ட அனைத்து பேருந்து நிலையங்களிலிருந்தும் பொது மக்கள் மற்றும் பக்தர்கள் வசதிக்காக, பிரதி அம்மாவாசை மற்றும் பௌர்ணமி போன்ற நாட்களுடன் ஆடிக்கிருத்திகை, தைபூசம், கூவாகம், தீபம், பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய திருவிழா மற்றும் விசேச நாட்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. **2019–20**–ஆம் நடப்பு நிதியாண்டில் ஜனவரி **2020** வரை (காஞ்சிபுரத்திற்கு இயக்கப்பட்ட அத்திவரதர் வைபவ திருவிழா உட்பட) **9,098** பேருந்துகளை கொண்டு **5.165** லட்சம் கி.மீ இயக்கி வருவாயாக ரூ.**1,888.25** லட்சங்கள் (கி.மீ **1**–க்கு ரூ.**36.56**) ஈட்டப்பட்டுள்ளன.

**மலை வழித்தடப் பேருந்துகள்**

மலைவாழ் மக்கள் மற்றும் மலைப்பாங்கான தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக **29** மலை வழித்தடப்

பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் விழுப்புரம் மண்டலத்தில் 10 பேருந்துகள் கல்வராயன், சேராப்பட்டு மற்றும் வெள்ளிமலை மலைப்பகுதியிலும், திருவண்ணாமலை மண்டலத்தில் 3 பேருந்துகள் ஜமுனாமரத்தூர் மலைப்பகுதியிலும், வேலூர் மண்டலத்தில் 16 பேருந்துகள் புதூர்நாடு, ஏலகிரி, வெலத்திகாமணிபென்டா, அரவட்லா, ஜமுனாமரத்தூர், பாலமதி, செங்காநத்தம் மலைப்பகுதிகளுக்கும் இயக்கப்பட்டு வருகின்றன.

**பயணிகளுக்கு வழங்கும் கூடுதல் வசதிகள்**

சாதாரண, விரைவு, சொகுசு, நடத்துனர் இல்லாத இடைநில்லாப் பேருந்துகளுடன், பயணிகளுக்குச் சிறந்த பயண அனுபவத்தை வழங்கும் பொருட்டு 3 X 2 இருக்கை வசதிகளுடன் கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் இக்கழகத்தால் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் தேவையின் அடிப்படையில் அதிக குளிர்சாதனப் பேருந்துகள் இக்கழகத்தில் சேர்க்கப்படும்.

**நைட்ரஜன் காற்று நிரப்பும் வசதி**

உருளிப்பட்டை உழைப்புத் திறனை மேம்படுத்தும் வகையில் விழுப்புரம், கொணவட்டம் மற்றும் சிதம்பரம் வளாகங்களில் நைட்ரஜன் வாயு நிரப்பும் மையம் நிறுவப்பட்டுள்ளது. இதன் விளைவாக 60% உருளிப்பட்டை பஞ்சர்கள் குறைக்கப்பட்டு உள்ளது.

### பயோ மெட்ரிக் வருகைப் பதிவு முறை

இப்போக்குவரத்துக் கழகத்தில் பயோ மெட்ரிக் வருகைப்பதிவு முறை விழுப்புரம் மற்றும் வேலூரில் உள்ள தலைமையகம் மற்றும் பணிமனைகளில் நிறுவப்பட்டுள்ளது. இதுபோன்று இதர இடங்களிலும் பயோ மெட்ரிக் வருகைப்பதிவு முறை விரையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

### ஓட்டுநர் பயிற்சி மையங்கள்

நடுவண் அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், புதுடெல்லி, நிதியுதவியுடன் விழுப்புரம், கடலூர், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மண்டலங்களில் பயிற்சி மையத்தை மேம்படுத்தவும் மற்றும் விழுப்புரம் மற்றும் வேலூரில் வாகன ஓட்டுநர் பயிற்சி தளங்களை நிறுவவும் ரூ.6.00 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 9. 4 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்

இப்போக்குவரத்துக் கழகம், சேலம் நகரை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றது. சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளுக்கு போக்குவரத்து சேவைகளை இக்கழகம்

வழங்கி வருகின்றது. இக்கழகம், சாதாரண மற்றும் விரைவுப் பேருந்துகளை இயக்குகின்றது.

இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை **32** ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை **2,222** மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை **1,900** ஆகும். இப்போக்குவரத்துக்கழகத்தில் பணியாளர்களின் எண்ணிக்கை **12,698** ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் இரு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் சராசரியாக மாதத்திற்கு **10** பேருந்துகள் கூண்டு கட்டும் கொள்ளளவை முறையே கொண்டு செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **2019–20–**ஆம் ஆண்டில், **273** குளிர்சாதனமில்லாப் புதிய பேருந்துகள் மற்றும் **10** குளிர்சாதன பேருந்துகள் பொது மக்களின் வசதிக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கழகம் **2019-2020-**ஆம் ஆண்டில் சிப்ப அனுப்புகைச் சேவை (Parcel service) மூலமாக ரூ.**43.02** லட்சங்களை கூடுதல் வருவாயாக ஈட்டியுள்ளது. மேலும், வழித்தடங்களில் சுகாதாரமான உணவகங்களில் பயணிகளின் வசதிக்காக பேருந்துகளை நிறுத்தியதன் மூலம் கூடுதல் வருவாயாக **2018–19** நிதியாண்டில் ரூ.**38.35** லட்சங்களும், **2019–20–**ஆம் நிதியாண்டில் ரூ.**14.91** லட்சங்களும் கூடுதல் வருவாயாக இக்கழகம் ஈட்டியுள்ளது.

இப்போக்குவரத்துக் கழகம் பேருந்துகளில் வணிக விளம்பரங்கள் மூலமாக கூடுதல் வருவாயாக 2018–19-ஆம் நிதியாண்டில் ரூ.130.87 லட்சங்கள் மற்றும் 2019–20-ஆம் நிதியாண்டில் ரூ.133.72 லட்சங்களும் மேலும் கிளை சுவர் விளம்பரம் மூலம் ரூ.4.40 லட்சங்களும் கூடுதல் வருவாயாக ஈட்டியுள்ளது.

இக்கழகம், பயணிகளுக்கு 3–ல் 1 பங்கு மாதாந்திரக் கட்டணச் சலுகை வழங்கியதன் மூலம் 2018–19–ஆம் நிதியாண்டில் புறநகர் பேருந்துகளில் 19,628 நபர்களுக்கும், நகர் பேருந்துகளில் 56,021 நபர்களுக்கும் பயன் அளித்துள்ளது. 2019–20–ஆம் நிதியாண்டில் புறநகர் பேருந்துகளில் 11,824 நபர்களுக்கும், நகர் பேருந்துகளில் 41,311 நபர்களுக்கும் பயன் அளித்துள்ளது.

இக்கழகம் ஏற்கனவே இயக்கப்பட்டு வரும் பேருந்துகளை கொண்டு தட நீட்டிப்பின் மூலமாக 2018–19–ஆம் நிதியாண்டில் 38 கிராமங்களுக்கு புதிதாக பேருந்து வசதி அளித்ததன் மூலம் 11,900 மக்களுக்கு பயண வசதி ஏற்படுத்தப்பட்டும், 2019–20ஆம் நிதியாண்டில் 23 கிராமங்களுக்கு புதிதாக பேருந்து வசதி அளித்து 9,000 மக்களுக்கு பயண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இக்கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு செய்து வருகின்றது:—**

(i) வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய விசேஷ நாட்களில் கீழ்க்காணும் சுற்றுலா தலங்களுக்கு சிறப்பு பேருந்து வசதிகள் ஏற்படுத்தி வருகிறது. ஏற்காடுமலை, கொல்லிமலை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலா தலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது.

(ii) பண்டிகை மற்றும் முக்கிய நாட்களில் கீழ்க்காணும் ஆலயங்களுக்கு சிறப்பு பேருந்து வசதி ஏற்படுத்தி வருகிறது. மாதேஸ்வரன் மலை. சிவன் கோயில் அமைந்துள்ள தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும் ஆறகலூர் பகுதிகளுக்கும், முருகன் கோயில் அமைந்துள்ள காளிப்பட்டி மற்றும் கபிலர்மலை பகுதிகளுக்கும், நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் ஆகிய வழிப்பாட்டுத் தலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகின்றது.

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் புதிய பயிற்சி நிலையங்கள் அமைப்பதற்கும், சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கும் தலா ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் பணிகள் நடைபெற்று வருகின்றன. வகுப்பறைகள் புதுபித்தல், மேஜை, நற்காலி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் பொது

மக்கள் நலனுக்காக கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி தளம் அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் அடங்கும்.

இக்கழகம், 27 நடத்துனர் இல்லா பேருந்துகளை சேலம் – கோவை மற்றும் சேலம் – பெங்களூரு வழித்தடத்தில் இயக்கி வருகின்றது. மேலும் சேலத்திலிருந்து கோவை, பெங்களூரு, மதுரை, கரூர் மற்றும் திருச்சி ஆகிய முக்கிய நகரங்களுக்கு 10 குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

இக்கழகம், ஏற்காடு மலை, கொல்லிமலை, கல்ராயன்மலை (வெள்ளிமலை) மற்றும் நல்லமதிமலை (பச்சமலை) ஆகிய பகுதிகளுக்கு 25 சேவைகளை மலைவாழ் மக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இயக்கி வருகின்றது.

இக்கழகத்தால் "அம்மா குடிநீர்" 38 விற்பனை நிலைங்களின் மூலம் முக்கியப் பேருந்து நிலையங்களிலும், பயணிகள் அதிகம் செல்லும் இடங்களிலும் விற்கப்படுகின்றது.

பணியாளர்களின் மன அழுத்தத்தினை குறைப்பதற்கும், வாழ்க்கை – வேலை சமநிலையினை மேம்படுத்துவதற்கும் 3,384 பணியாளர்களுக்கு 2019-2020-ஆம் நிதியாண்டில் யோகா பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 9.5. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்

இக்கழகம், கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் கீழ் இயங்கி வருகின்றது. கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் நான்கு மண்டல அலுவலகங்கள் உள்ளன. இக்கழகம் 44 கிளைகளையும், 8 கோட்ட அலுவலகங்களையும் கொண்டுள்ளது. இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 2,940 மற்றும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 17,780 ஆகும்.

இக்கழகத்தில் பணிபுரியும் நடத்துநர், ஓட்டுநர், பணிமனைத் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு தேவையான பயிற்சி அளித்து வேலைத் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1978-இல் பொள்ளாச்சியில் பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் பவானிசாகரிலும் பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சி பயிற்சி நிலைய வளாகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஓட்டுநர்களுக்கும், நிரந்தர ஓட்டுநர்களுக்கும் தங்களது பேருந்து ஓட்டும் திறனை மேம்படுத்திக்கொள்ள ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவிக்கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதுவரை 7,523 ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு, சாலைப் பாதுகாப்பு நிதியின்கீழ் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் மூலம் பவானிசாகர் பயிற்சி மையத்தில் ஒரு ஓட்டுதல் ஒத்த கருவி தற்போது நிறுவப்பட்டுள்ளது.

**இக்கழகம் பயணிகள் போக்குவரத்துடன் பொது மக்களுக்கு பின்வரும் சேவைகளையும் செய்து வருகிறது:**

- இக்கழகம் வால்பாறை, மருதமலை, உதகமண்டலம் மற்றும் கூடலூரில் பேருந்து நிலையங்களை அமைத்து பராமரித்து வருகின்றது.

- பயணிகளின் வசதிக்காக இக்கழகம் பர்லியார் மற்றும் ஆசனூரில் சாலையோர சிற்றுண்டி விடுதிகளை பராமரித்து வருகின்றது.

## 9.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்

இக்கழகம், கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்துச் சேவையைக் கண்காணிக்க கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, காரைக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை **61** ஆகும். இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை **3,457** மேலும், **3,335** வரையறுக்கப்பட்ட சேவைகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் உள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை **21,480** ஆகும். இக்கழகம், நகர், புறநகர் மற்றும் சொகுசுப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

இப்போக்குவரத்துக் கழகத்தின் கூண்டு கட்டும் பிரிவுகள் பொறையாா், கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும், உதிரி பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவு மற்றும் உருளிப்பட்டை புதுப்பிக்கும் பிரிவுகள் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இயங்கி வருகின்றன.

மணச்சநல்லூரில் புதிய பணிமனையினை மாண்புமிகு முதலமைச்சா் அவா்களால் 29.01.2020 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. விராலிமலை, கரூா், திருமயம், சாயல்குடி, பாளையம் மற்றும் கீரனூா் ஆகிய இடங்களில் புதிய கிளைகளை கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்.

கும்பகோணம், ஸ்ரீரங்கம், பிராட்டியூர் மற்றும் மணல்மேல்குடி ஆகிய இடங்களில் புதிய கிளைகளை துவங்குவதற்கு நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், கும்பகோணம் நகர்-II, கரூர் மற்றும் பொறையாா் ஆகிய இடங்களில் புதிய ஓய்வு அறை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கரூா், அரியலூா், திருச்சி மற்றும் பெரம்பலூா் ஆகிய இடங்களில் பயிற்சி ஓடுதளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 9.7 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை

இக்கழகம், மேலாண் இயக்குநரின் தலைமையில் மதுரை மாநகரை தலைமையிடமாகக் கொண்டு மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவையை வழங்கி வருகின்றது.

இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 39 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,342 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 14,337 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளில், 1,207 புதிய பேருந்துகளும், 91 புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முழு உடல்பரிசோதனை திட்டத்தின் கீழ் 6,103 தொழிலாளர்கள் முழு உடல்பரிசோதனை செய்து பயனடைந்துள்ளார்கள்.

பழகுநர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த கருவி மூலம் ஓட்டுநர் பயிற்சியினை இக்கழகம் வழங்கி

வருகின்றது. 2019-2020-ஆம் ஆண்டில், மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மண்டலங்களில் 400 ஒட்டுநர்கள் பயனடைந்துள்ளனர்.

**பயணிகளுக்கான இதர வசதிகள்**

- இக்கழகத்தில் பயணிகளின் வசதிக்கேற்ப நகர மற்றும் புறநகர் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக மாதாந்திர சலுகைக் கட்டண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

- போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டில் உள்ள 20 பேருந்து நிலையங்களில் அம்மா குடிநீர் திட்டத்தின் கீழ் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- 30 இரவு நகரப் பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

- பேருந்து நிறுத்தத்தின் பெயரை முன்னரே அறிவிப்பு செய்யும் முறை மதுரை நகரில் இயக்கப்படும் 50 பேருந்துகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- திருவிழாக்களை முன்னிட்டு கீழ்கண்ட இடங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. (1 ) வீரபாண்டி ( 2 ) இருக்கன்குடி ( 3 ) வேளாங்கன்னி ( 4 ) பழனி ( 5 ) ஸ்ரீ சபரிமலை ஐயப்பன் கோவில் (6) அழகர்கோவில் (7) திருச்செந்தூர் கோவில் (8)

மாசாணியம்மண் கோவில் (9) திருவண்ணாமலை கிரி வலம் மற்றும் திருப்பரங்குன்றம் கோவில்.

- வெளி மாநிலங்களிலிருந்து மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வழிபட வரும் பக்தர்களின் வசதிக்காக நான்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- மதுரை, அதிகமான சுற்றுலா இடங்களைக் கொண்ட ஒரு பண்டைய நகரம் என்பதால், மதுரையிலிருந்து 10 கி. மீ தூரத்தில் உள்ள திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கும், சுமார் 23 கி.மீ தொலைவில் உள்ள கள்ளழகர் திருக்கோயிலுக்கும் பொதுமக்களின் தேவைகளின் அடிப்படையில் சுற்றுலா பேருந்துகளை இக்கழகம் இயக்கி வருகின்றது.

## 9.8 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

- இக்கழகம், மேலாண் இயக்குநர் தலைமையின் கீழ், திருநெல்வேலி நகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. போக்குவரத்து சேவையை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் கண்காணித்து மேம்படுத்த, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 30 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,762 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,661 ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 10,823 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு, அதிநவீன, மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் இக்கழகத்திற்கு சொந்தமாக உள்ளன.

- பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப, புதிய பணிமனைகளின் எண்ணிக்கையினை உயர்த்திட அரசு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, சேரன்மாதேவி, ஆலங்குளம் மற்றும் சாத்தான்குளம் ஆகிய இடங்களில் 3 புதிய பணிமனைகள் தொடங்க அறிவிப்பு செய்யப்பட்டது. சேரன்மாதேவி மற்றும் சாத்தான்குளத்தில் புதிய பணிமனைகள் தொடங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. மேலும், ஆலங்குளத்தில் பணிமனை கட்டுவதற்கான இடத்தினை தேர்வு செய்யும் பொருட்டு, இக்கழகம் வருவாய் துறையுடன் ஆலோசித்து வருகின்றது.

- 16.05.2011 முதல் 31.01.2020 வரை 10 குளிர்சாதனப் பேருந்துகள் உள்பட 867 புதியப் பேருந்துகளும், 73 புதிய வழித்தடங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- முழு உடல் பரிசோதனை திட்டத்தின் கீழ் **4,857** தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

- இக்கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதியினை செய்து வருகிறது.

- இப்போக்குவரத்துக் கழகத்தால் திருச்செந்தூர், சங்கரன்கோவில், திருவில்லிபுத்தூர், உவரி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் போன்ற முக்கிய சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

- "அம்மா குடிநீர்" திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரியிலுள்ள பேருந்து நிலையங்களில் **18** விற்பனை நிலையங்களின் மூலமாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

- மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டத்தின்படி இக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கன்னியாகுமரி பேருந்து நிலையத்தில் குழந்தைகளுக்கு தாய்பால் ஊட்டுவதற்கு தனி அறை அமைக்கப்பட்டு செயல்பாட்டிலுள்ளது.

- இக்கழகத்தால் இரண்டு இரவு பேருந்துகள் திருநெல்வேலி நகரத்திலும் மற்றும் ஒரு இரவு பேருந்து நாகர்கோவில் நகரத்திலும் இயக்கப்பட்டு வருகின்றது.

- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் மண்டலத்தின் 24 வழித்தடங்களின் மூலம் 53 தனி நடைகள் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கென இயக்கப்பட்டு வருகின்றன.

- இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக, 18 நடத்துனர் இல்லா பேருந்துகளை திருநெல்வேலி – நாகர்கோவில் வழித்தடத்திலும், 5 நடத்துனர் இல்லா பேருந்துகளை திருநெல்வேலி – தூத்துக்குடி வழித்தடத்திலும் இயக்கி வருகின்றது.

## அத்தியாயம்–10

### 10.1 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை

பொது மக்கள், அரசு துறைகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து வைப்பீடுகள் பெற்று தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான மூலதனம் மற்றும் நடைமுறை மூலதன நிதியுதவியை பூர்த்தி செய்வதே தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நிறுவனமானது, தமிழக அரசிற்கு சொந்தமான வங்கி இல்லாத நிதி நிறுவனமாகும். இந்நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, **25.03.1975** அன்று தொடங்கப்பட்டது..

### 10.2 நிதிச் செயல்பாடு

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட **1975–**ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் கடந்த ஆறு ஆண்டுகளாக ஈட்டிய இலாபம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டி தள்ளு படிக்கு முந்தைய இலாபம் | வட்டி தள்ளுபடி செய்தது | வட்டி தள்ளுபடிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் இலாபம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய இலாபம் |
|---|---|---|---|---|---|
| 2014–2015 | 3294.25 | 2509.00 | 785.25 | 269.69 | 530.48 |
| 2015–2016 | 5283.29 | 4648.68 | 634.61 | 212.95 | 423.36 |
| 2016–2017 | 7322.42 | 6469.00 | 853.42 | 282.17 | 571.25 |
| 2017–2018 | 7996.71 | 6964.50 | 1032.21 | 357.23 | 674.98 |
| 2018–2019 | 9885.93 | 8684.16 | 1201.77 | 419.95 | 781.82 |
| 2019–2020 (செலவு திட்ட மதிப்பீடு) | 11247.85 | 9800.00 | 1447.85 | 505.94 | 941.91 |

## 10.3 வைப்பீடுகள்

இந்நிறுவனம் பொது மக்களிடம் முதலீட்டிற்கு ஏற்ற நிறுவனம் என்ற நம்பகத்தன்மையைத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. **31.01.2020** அன்றுள்ளபடி, இந்நிறுவனத்தில் செய்துள்ள மொத்த வைப்புத்தொகை ரூபாய் **5,920.44** கோடியாகும்.

## 10.4 வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள்

வைப்பீடுகளுக்கான வட்டி வீதம் சந்தை நிலவரத்திற்கேற்பவும், போக்குவரத்துக் கழகங்களின் நிதித் தேவை மற்றும் கடனை திருப்பிச் செலுத்தும் தன்மைக்கேற்ப வழங்கப்படுகின்றது. தற்போதைய வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| காலம் | வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் (கூட்டு வட்டி மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) 16.05.2018 முதல் | |
|---|---|---|
| | பொதுமக்கள் | மூத்த குடிமக்கள் |
| 12 மாதங்கள் | 7.50% | 7.75% |
| 24 மாதங்கள் | 7.75% | 8.00% |
| 36 லிருந்து 60 மாதங்கள் | 8.25% | 8.75% |

## 10.5 வைப்பீட்டுத் திட்டங்கள்

தற்போது கீழ்க்கண்ட இரு வைப்பீட்டுத் திட்டங்கள் உள்ளன.

| | திட்டம் 1 | திட்டம் 2 |
|---|---|---|
| | குறித்த காலம்தோறும் வட்டி வழங்கும் திட்டம் | பணப்பெருக்குத் திட்டம் |
| குறைந்தபட்ச வைப்பீடு | ரூ.25,000/– * | ரூ.25,000/– * |
| காலம் (மாதங்களில்) | 24,36,48 மற்றும் 60 | 12, 24, 36, 48, மற்றும் 60 |
| வழங்கும் வட்டி வீதம் | 24 மாதங்கள் – காலாண்டு, 36 – 60 மாதங்கள் – மாதம், காலாண்டு மற்றும் ஆண்டு வட்டி. | முதிர்வுறும்போது (கூட்டுவட்டி மாதந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) |

* **01.01.2020** நடைப்பெற்ற குழும கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் குறைந்தப்பட்ச வைப்பீட்டு தொகை ரூ.**10,000**/-லிருந்து ரூ.**25,000**/-மாக மாற்றியமைக்கப்பட்டது.

## 10.6 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட வைப்பீடுகள்

இத்திட்டம் தமிழக அரசால் சமூக நலத்துறையின் மூலம் வழங்கப்படும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமாகும். **31.01.2020** அன்றுள்ளவாறு, இத்திட்டத்தின்கீழ் **88,964** வைப்பீடுதாரர்களின் மூலம் பெறப்பட்ட வைப்பீடு ரூ.**13.47** கோடியாகும்.

## 10.7 நிறுவனத்தின் நிதி நிலை

**31.01.2020** அன்றுள்ளவாறு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மொத்த நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:

**(ரூபாய் கோடியில்)**

| | | |
|---|---|---|
| பங்கு மூலதனம்<br>அ) அரசு பங்குத்தொகை<br><br>ஆ) அரசு போக்குவரத்து கழகங்களின் பங்குத்தொகை | <br>1,057.63<br><br>18.71<br>———— | <br><br><br><br><br>1076.34 |
| மிகுதித் தொகை மற்றும் ஒதுக்கீடு | | 133.89 |
| வைப்பீடுகள் | | 5920.44 |
| **மொத்தம்** | | **7,130.67** |

## 10.8 கடன்கள்

2019–2020 (ஜனவரி 2020 வரை) ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளிக்கப்பட்ட கடன் உதவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(ரூபாய் கோடியில்)**

| | | |
|---|---|---|
| 1. | தவணைக் கொள்முதல் கடன்கள் | 916.62 |
| 2. | குறுகிய கால கடன் மோட்டார் வாகன அரையாண்டு வரி செலுத்துவதற்காக மற்றும் இதர கடன்களுக்காக கொடுக்கப்பட்டது. | 777.51 |
| 3. | பருவக்கடன்கள் நடைமுறை மூலதனத்திற்காக வழங்கியது. | 2,858.24 |
| | **மொத்தம்** | **4,552.37** |

இந்நிறுவனத்தின் குறுகிய கால கடன் உதவியினால் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் அரையாண்டிற்கான மோட்டார் வாகன வரியை மொத்தமாக செலுத்தியதால் வாகன வரியில் நான்கு சதவீதம் தள்ளுபடி பெற்று போக்குவரத்துக் கழகங்களின் செலவினைக் குறைக்க உதவியது.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் அளித்த கடனுதவி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | நிதியுதவிகள் |
|---|---|
| 2014–2015 | 2,151.24 |
| 2015–2016 | 2,776.33 |
| 2016–2017 | 3,574.32 |
| 2017–2018 | 3,757.58 |
| 2018–2019 | 3,618.45 |
| 2019–2020 (ஜனவரி 2020 வரை) | 4,552.37 |

## 10.9 புதிய கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி வீதம்

இந்நிறுவனம் அனைத்து அரசு போக்குவரத்து கழகங்களுக்கும் வழங்கிய புதிய கடன்களுக்கான வட்டி வீதம் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

| | வட்டி வீதம் | நாளன்றுள்ளவாறு |
|---|---|---|
| தவணைக் கொள்முதல் கடன்கள் | 9.75% | 01.01.2018 |
| ரூ.600 கோடி தவணைக் கொள்முதல் கடன் அரசாணை நிலை எண். 26, போக்குவரத்து (எ) துறை, நாள்: 28.02.2019 | 2.00% | 28.02.2019 |
| ரூ.302.06 கோடி தவணைக் கொள்முதல் கடன் அரசாணை நிலை எண். 117, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 10.7.2019 | 12.60% | 10.07.2019 |
| குறித்த காலக் கடன்கள் | 10.00% | 01.04.2017 |
| குறுகிய கால கடன்கள் (சம்பளம்) | 10.25% | |

## 10.10 போக்குவரத்து கழகங்களின் மூலதன ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் "வங்கிகளுடனான தற்போதுள்ள மூலதன ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வட்டி வீதத்தை குறைத்தல்", அறிவிப்பிற்க்கிணங்க இந்நிறுவனம் அரசு ஆணை எண்.113 போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 04.07.2019 மூலம் பாரத ஸ்டேட் வங்கியிடம் இருந்து ரூ.900/– கோடி ரொக்க கடன் பெற்று அதை போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளது. இதனால் போக்குவரத்துக் கழகங்கள் ஆண்டுக்கு ரூ.65/– கோடி வரை வட்டி ஆதாயம் கிடைத்துள்ளது.

## 10.11 பங்கு மூலதன உதவி

2019–2020-ஆம் ஆண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 2,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு ரூ.150 கோடியினை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு பங்கு மூலதன உதவியாக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–11

## பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு

**11.1** சாலைப் போக்குவரத்துத் தொடர்பான ஆலோசனைகள் வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கிய அடிப்படை நோக்கமாகும். இந்நிறுவனம் தொடங்கிய காலத்தில் இருந்து தன்செயல்பாடுகளை பல்வேறு துறைகளுக்கும் விரிவுபடுத்தி தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் தயாரிப்பு, ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல், போக்குவரத்துப் பணி, அறிவார்ந்த போக்குவரத்து முறைகள் ஆகிய பல்வேறு துறைகளில் தனது ஆலோசனை சேவைகளை அளித்துள்ளது. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவானது, **1984**–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.**50** லட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன், ரூ.**10** லட்சம் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது.

### 11.2 இந்நிறுவனம் ஈடுபட்டுள்ள திட்டங்கள்

**1.** தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்க்காக, சென்னை–பேருந்து விரைவு போக்குவரத்து அமைப்பு (பி.ஆர்.டி.எஸ்)க்கான விரிவான திட்ட அறிக்கை (டி.பி.ஆர்) தயாரித்தல், **2.** அரசு போக்குவரத்து கழகங்களில் நிகழ்நிலை மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்புகளை செயல்படுத்துதல், **3.** நிகழ்நிலை இணையதள

முன்பதிவு வசதியை கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மேற்கொள்ளுதல் **4.** கோயம்புத்தூரில் உள்ள எல் அண்ட் ட்டி புறவழிச்சாலையில் போக்குவரத்து கணக்கெடுப்புபணி **5.** தென்னிந்திய தானியங்கி வாகன சங்கத்திற்கு மென்பொருள் உருவாக்குதல் மற்றும் **6.** தமிழ்நாடு ஆவணகாப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறைக்கான பழைய ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல் ஆகிய திட்டங்களில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது

## 11. 3 எதிர்கால வாய்ப்புகள்

இந்திய அரசின் FAME-II திட்டத்தின் கீழ், புதிய தொழில்நுட்ப திட்டமான, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் மின்சார பேருந்துகளை (இ–பஸ்) இயக்கும் திட்டத்தைப் பெறுவதற்கு, இக்கழகம் அரசு விரைவு போக்குவரத்து கழகத்துடன் இணைந்து, ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. மேலும், சென்னை மாநகர போக்குவரத்து கழகத்திற்கு புதிய மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்களை செயல்படுத்தும் திட்டத்திலும், தென்னிந்திய தானியங்கி வாகன சங்கத்தின், வணிகச் செயல்பாட்டினை நவீன மயமாக்குதல், தமிழ்நாடு ஆவணகாப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறைக்கான நூலக தகவல் அமைப்பின் வருடாந்திர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் திட்டங்களுக்கு செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளது.

# அத்தியாயம்–12

## சாலைப் போக்குவரத்து நிறுவனம்

**12.1** சாலை போக்குவரத்து நிறுவனமானது சாலை போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டு பணிகள், சாலை விபத்து ஆய்வு மற்றும் ஆராய்ச்சி பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை, அரசு போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினை பரிசோதித்தல், மற்றும் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் / பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் **1860**–ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு **1976**–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

### 12.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி

சாலைப் போக்குவரத்து நிறுவனம், தற்போது கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களை கும்மிடிபூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து **15** இடங்களிலும் பயிற்சி அளித்து வருகிறது. **17** பயிற்சி மையங்களில் **2019–20**–ஆம் ஆண்டு வரை மொத்தம் 62,282 நபர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சாலை போக்குவரத்து நிறுவனம்

இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சிகளை, சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் அளித்து வருகின்றது.

## 12.3 திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, சாலை போக்குவரத்து நிறுவனம் மற்றும் அரசு போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்களிலும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. 2019–20 வரை நடைபெற்ற 1,937 பயிற்சிகளின் மூலம் மொத்தம் 40,921 போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

## 12.4 உபகரணங்கள் பரிசோதனைக்கூடம்

சாலைப் போக்குவரத்து நிறுவனத்திலுள்ள உபகரணங்கள் பரிசோதனைக் கூடத்தில் 54 மோட்டார் வாகன உதிரிபாகங்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்த பரிசோதனைக் கூடத்தில் 5,907 மாதிரிக் கூறுகள் (samples) இதுவரை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

### 12.5 சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவு

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு இதுவரை **526** ஆராய்ச்சி அறிக்கைகள், **30** ஆலோசனை அறிக்கைகள் வெளியிட்டுள்ளது. மேலும், விபத்து ஆராய்ச்சி கையேடு மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்கான வழிகாட்டியினை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனம், அரசு போக்குவரத்துக் கழகங்கள் பயன்பெறும் வகையில் தொழில்நுட்ப கையேட்டினை வெளியிட்டுள்ளது.

### 12.6 கொள்முதலில் ஒருங்கிணைப்பு முகமை

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள், பேருந்து கூண்டு கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், உருளிப்பட்டை புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள், மசகு எண்ணெய் (லூப்ரிகன்ட்ஸ்) மற்றும் அம்மா குடிநீர் தயாரிப்பதற்கான மூல பொருட்கள் ஆகியவைகளை வாங்குவதில் சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

**12.7 கல்வி நிறுவனங்கள்**

போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சி பணிகளுக்காகவும், போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களின் நலனுக்காகவும், 1984 ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி இந்நிறுவனத்தால் ஈரோடு மாவட்டம் சித்தோட்டில் துவக்கப்பட்டது. இக்கல்லூரியில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் ஆண்டுதோறும் 468 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இக்கல்லூரியில் இதுவரை 9,704 மாணவர்கள் இளநிலை பொறியியலிலும் (பி.இ), 220 மாணாக்கர்கள் முதுகலை (கட்டடவியல்) பொறியியலிலும் (எம்.இ), 32 மாணாக்கர்கள் முதுகலை (கணினி) அறிவியலிலும், பட்டங்கள் பெற்றுள்ளனர். இப்பொறியியல் கல்லூரி, மாநிலத்திலுள்ள முதல்தர கல்லூரிகளில் ஒன்றாகும்.

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் மூன்று தொழில்நுட்ப பயிலக கல்லூரிகள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் (கிருஷ்ணகிரி) மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992–93 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. தற்போது, இம்மூன்று தொழில்நுட்ப கல்லூரிகளிலும் ஆண்டுதோறும் மொத்தம் 700 மாணவர்கள் பட்டய பொறியாளர் படிப்பில் அனுமதிக்கப்படுகிறார்கள். இம்மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சேர்ந்து 2019 வரை 10,107 மாணவர்கள் பட்டயங்கள்

பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தால் நடத்தப்படும் கல்லூரிகளில் அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் தற்போது நிரப்பப்படும் இடங்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பிரிவுகள் | மொத்த இடங்கள் | நிரப்பப்படும் இடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் |
| 1. | பொறியியல் கல்லூரி | | | |
| (அ) | இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு | 420 | 273(65%) | 147 (35%) |
| (ஆ) | முதுகலைப் பட்டம் கட்டிடவியல் | 24 | 17(72%) | 7 (28%) |
| (இ) | கணினி பொறியியல் | 24 | 17(72%) | 7(28%) |
| 2. | தொழில்நுட்ப பயிலகங்கள் | 700 | 350 (50%) | 350 (50%) |

தொடக்கத்தில் சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கல்வி நிறுவனங்களுகான மூலதனச் செலவினங்களை தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக் கொண்டன. சாலைப் போக்குவரத்து நிறுவனம் சென்னை மற்றும் கும்மிடிபூண்டி பயிற்சி மையங்களுக்கான அன்றாட செலவினங்களை **2013**ஆம் ஆண்டு முதல் அரசாணை எண்.**6** போக்குவரத்து (அ) துறை நாள் **08.01.2013**ன்படி போக்குவரத்துக் கழகங்களுக்கு கொள்முதல் செய்யப்படும் பொருட்களை வழங்குபவர்களிடமிருந்து சிறப்பு நிர்வாக தள்ளுபடி வசூல் மற்றும் அனைத்து அரசு போக்குவரத்து

கழகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தொழிலாளிடமிருந்து பெறப்படும் வட்டியில்லா கடன் தொகை வைப்புநிதியிலிருந்து வரும் வட்டி வருமானம், கல்வி கட்டணம் ஆகியவற்றின் மூலம் ஈடு செய்யப்படுறது.

செயல்பாட்டு காரணங்களுக்காக, சாலை போக்குவரத்து நிறுவன பெருந்துறை மருத்துவக்கல்லூரி அரசு ஆணைப்படி சுகாதார மற்றும் குடும்ப நலத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கல்வி நிறுவனங்களில் இவ்வாண்டில் 277 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

## அத்தியாயம்–13

## சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு

### 13.1 சாலைப் போக்குவரத்து இதழ்

சாலை போக்குவரத்து நிறுவனம் சாலை போக்குவரத்து, சாலை பாதுகாப்பு, விபத்து ஆய்வு மற்றும் மின்னணு பயணச்சீட்டு முறை போன்ற தகவல்களை உள்ளடக்கிய "Journal of Road Transport" என்கிற காலாண்டு இதழை வெளியிடுகின்றது.

### 13.2 உதிரி பாகங்கள் பரிசோதனை மற்றும் தரம் கண்காணித்தல்

அகில இந்திய சாலை போக்குவரத்துக் கழகம் (ASRTU) மற்றும் இந்திய தரக்காப்பீட்டு நிறுவனம் (BIS) நிர்ணயித்த குறியீடுகளின்படி பேருந்தில் பயன்படுத்தப்படும் 54 வகையான உதிரி பாகங்களை பரிசோதனை செய்வதற்கான உபகரணங்கள் இந்நிறுவனத்தில் உள்ள பரிசோதனைக் கூடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில் 2018–19 வரை 5,881 மாதிரிக் கூறுகள் (samples) பரிசோதனைச் செய்யப்பட்டது. 2019–20ஆம் ஆண்டில் 26 உதிரி பாகங்களின் மாதிரி கூறுகள் போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து பெறப்பட்டு அதன் விவரம் அகில இந்திய சாலை போக்குவரத்துக் கழக விதிகளின்படி போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 13.3 போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பதவி உயர்வுக்கான தேர்வு

அரசு போக்குவரத்து கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு அளிப்பதற்காக மேலாளர்கள் தேர்வு மற்றும் இதர பிரிவினர்களுக்கான தேர்வு **02.06.2019—ல்** இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இத்தேர்வுகளில் கலந்து கொண்டோர் மற்றும் தேர்ச்சி பெற்றோர் விபரம் பின்வருமாறு:—

| வ. எண் | தேர்வு விபரம் | தேர்வில் பங்கேற்றவர் | தேர்ச்சியடைந்தோர் | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | மேலாளர்கள் பதவிக்கான தேர்வு | 79 | 52 | 66 |
| 2. | கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர் பதவிகளுக்கான தேர்வு | 416 | 302 | 73 |
| | **மொத்தம்** | **495** | **354** | **72** |

மேலாளர்கள் மற்றும் இதர பிரிவினருக்கான துணைத் தேர்வு **18.08.2019** அன்று நடைப்பெற்றது அதன் விபரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **தேர்வு விபரம்** | **தேர்வில் பங்கேற்றவர்** | **தேர்ச்சி யடைந்தோர்** | **தேர்ச்சி விகிதம்** |
|---|---|---|---|---|
| 1. | மேலாளர்கள் பதவிக்கான தேர்வு | 25 | 21 | 84 |
| 2. | கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர் பதவிகளுக்கான தேர்வு | 207 | 161 | 78 |
| | **மொத்தம்** | **232** | **182** | **78** |

## 13.4 போக்குவரத்து மைய கொள்முதல் பிரிவு

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள் (Chassis), பேருந்து கூண்டு கட்டுதல் (Bus Body Building), முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள் (Fully Built Buses), உருளிப்பட்டைகள் (Tyres), பயணச்சீட்டு அச்சிடல் (Printing of Tickets), உருளிப்பட்டை புதுப்பிக்கும் பொருட்கள் (R.T. Materials), மசகு எண்ணெய் (Lubricants) மற்றும் அம்மா குடிநீர்

பாட்டில்கள் தயாரிப்பு மூலப்பொருட்கள் ஆகியவற்றின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலைப் போக்குவரத்து நிறுவனம் முகமை நிறுவனமாக செயல்பட்டுவருகிறது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வந்த உயர்மட்டக் குழுவிற்கு பதிலாக ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவினையும் அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

மாணவர் பேருந்து பயண அட்டை உருளிப்பட்டை மறுசுழற்சிக்கான மூலப்பொருட்கள், பேருந்து அடிச்சட்டம், பேருந்து கூண்டு கட்டுதல் மற்றும் LAMB திட்டத்திற்கான விலை நிர்ணயம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழு **2019–20**–ஆம் ஆண்டில் **6** முறை கூட்டப்பட்டுள்ளது.

# அத்தியாயம்–14

## 14.1 பயிற்சிப் பிரிவு

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கென பல்வேறு பயிற்சிகள் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்கள் மற்றும் சாலைப் போக்குவரத்து நிறுவனம், தரமணி ஆகிய இடங்களில் நடத்தப்படுகிறது. இப்பயிற்சிகளை சிறந்த முறையில் நடத்திட ஆண்டு தோறும் கால அட்டவணை தயாரித்து போக்குவரத்து கழகங்களுக்கு அனுப்பப்பட்டு அதன்படி பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | பயிற்சி வகுப்புகள் எண்ணிக்கை | | | கலந்து கொண்டோர் நபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2018–19 வரை | 2019–20 | மொத்தம் | 2018–19 வரை | 2019–20 | மொத்தம் |
| 1. | சாலைப் போக்குவரத்து நிறுவனம், தரமணி மற்றும் கிளை நிறுவனங்களில் நடத்தப்பட்ட பயிற்சிகள் | 999 | 30 | 1,029 | 17,903 | 455 | 18,358 |
| 2. | கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் இதர பயிற்சிகள் | 495 | 1 | 496 | 10,034 | 31 | 10,065 |
| | **மொத்தம்** | **1,494** | **31** | **1,525** | **27,937** | **486** | **28,423** |

தற்பொழுது 29 ஊழியர்கள் 5 போக்குவரத்து கழக அயற்பணி அலுவலர்கள் உட்பட தரமணி தலைமை அலுவலகத்தில் பணி புரிந்து வருகின்றனர்.

### 14.2 ஓட்டுநர் பயிற்சி மையம்

**கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம், கும்மிடிபூண்டி:** கும்மிடிபூண்டி ஓட்டுநர் பயிற்சி மையத்தில் 12 வார கால கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி விஞ்ஞான முறைப்படி அளிக்கப்பட்டு வருகிறது. அப்பயிற்சியில் சேருவதற்கான குறைந்த பட்ச தகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | குறைந்தபட்ச கல்வி தகுதி | : | பொருந்தாது |
| 2. | ஓட்டுநர் உரிமம் உரிமம் மற்றும் பயணிகள் வாகன ஓட்டுநர் வில்லை | : | இலகுரக வாகன ஓட்டுநர் |
| 3. | முன் அனுபவம் இலகுரக வாகனம் இயக்கியிருத்தல் | : | குறைந்தபட்சம் ஒரு வருடம் |
| 4. | வயது | : | 20 வயதுக்கு குறையாமல் |
| 5. | உயரம் | : | குறைந்த பட்சம் 159.5 செ.மீ. |
| 6. | எடை | : | குறைந்த பட்சம் 50 கி.கி |

கும்மிடிப்பூண்டி ஓட்டுநர் பயிற்சிப் பிரிவில் காலாண்டிற்கு 150 மாணவர்கள் வீதம் ஆண்டுதோறும் சுமார் 600 மாணவர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்கு தேவையான மாணவர்களை தேர்ந்தெடுக்க செய்தித்தாள்களின் விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு மேற்கண்ட தகுதிகளுடைய விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுகின்றனர். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் பரிந்துரை செய்யப்படும் நபர்களுக்கும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

12 வார கால பயிற்சி காலத்தில் பயிற்சி மாணவர்களுக்கு வாகனம் ஓட்டுதலில் பயிற்சி, பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்கு ஓட்டுநர் கல்வி, வாகனவியல், போக்குவரத்து கல்வி, நடத்துநர் கல்வி மற்றும் பொது மக்கள் தொடர்பு ஆகிய பாடங்களில் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இத்தேர்வுகள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவோர் சென்னை, ரெட்ஹில்சில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற அறிவுறுத்தப்படுவர். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தேர்ச்சி சான்றிதழும் வழங்கப்படுகிறது.

மேலும், இந்நிறுவனம் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள், பொதுத் துறை நிறுவனம் மற்றும் தனியார் துறை நிறுவன ஓட்டுநர்கள்

பயன்பெறும் வகையில் தற்காப்பாக வாகனம் ஓட்டுதல் பயிற்சி, ஆபத்தான பொருட்களை ஏற்றிச் செல்லும் ஓட்டுநர்களுக்கான சிறப்பு பயிற்சி, சாலைப் பாதுகாப்பு விதிகள், எரிபொருள் சிக்கனம், விபத்துக்குள்ளான ஓட்டுநர்களுக்கான சிறப்பு பாதுகாப்பு ஓட்டுநர் பயிற்சி போன்ற பல்வேறு புத்தாக்க மற்றும் புனர்பயிற்சிகள் ஒரு மாதம், 15 நாட்கள், 5 நாட்கள், 3 நாட்கள், 2 நாட்கள் மற்றும் ஒரு நாள் என்ற அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, கும்மிடிபூண்டி மற்றும் திருச்சிராப்பள்ளி தவிர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து மதுரை, நாகர்கோவில், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், சேலம், தருமபுரி, ஈரோடு, பொள்ளாச்சி, விழுப்புரம், வேலூர், கும்பகோணம், காரைக்குடி, திருச்சிராப்பள்ளி (விரைவு) மற்றும் புதுக்கோட்டை ஆகிய 15 மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வோட்டுநர் பயிற்சி பள்ளிகளில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புனர் பயிற்சி பெற்றோர் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2018–19 வரை | 2019–20 நடப்பாண்டில் (ஜனவரி 2020 வரை) | மொத்தம் |
| 1 | கும்மிடிப்பூண்டி | 22,635 | 880 | 23,515 |
| 2 | திருச்சி | 2,410 | 109 | 2,519 |
| 3 | இதர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பயிற்சி மையங்களில். | 35,316 | 932 | 36,248 |
| | மொத்தம் | 60,361 | 1,921 | 62,282 |
| | புனர் பயிற்சிகள் (கும்மிடிப்பூண்டியில் மட்டும்) | 61,504 | 2507 | 64,011 |

## 14.3 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

1997–98ம் ஆண்டு முதல் இரு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் சென்னை, மற்றும் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வருகிறது. தற்பொழுது ஈரோட்டில் உள்ள சாலை மற்றும் பொறியியல் கல்லூரியிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இப்பள்ளிகளில் இதுவரை இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களின் விவரம் வருமாறு:–

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2018–19 | 2019–20 (ஜனவரி 2020 வரை) | மொத்தம் |
| 1. | தரமணி, சென்னை | 2,529 | 288 | 2,817 |
| 2. | திருச்சி | 1,008 | 61 | 1,069 |
| 3. | ஈரோடு | 321 | 29 | 350 |
| மொத்தம் | | 3,858 | 378 | 4,236 |

மேலும் அரசு ஆணைப்படி கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலுக்காக ஒரு நாள் சிறப்புபயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தோர் விபரம் வருமாறு:–

| வ. எண் | விபரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2018–19 | 2019–20 | மொத்தம் |
| 1. | தரமணி, சென்னை | 6,594 | 153 | 6,747 |
| 2. | கும்மிடிப்பூண்டி | 3,387 | 33 | 3,420 |
| 3. | திருச்சி | 24,436 | 818 | 25,254 |
| மொத்தம் | | 34,417 | 1,004 | 35,421 |

சாலை போக்குவரத்து நிறுவன தரமணி ஓட்டுநர் பயிற்சி தளத்தை 1,660 நபர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

தற்போது கும்மிடிப்பூண்டி பயிற்சிப் பிரிவில் மொத்தம் 16 பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். இவர்களில் 8 நபர்கள் போக்குவரத்து கழகங்களிலிருந்து அயற்பணியில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், திருச்சி பயிற்சிப் பிரிவில் ஒரு அலுவலர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்டிலிருந்து அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றார்.

## 14.4 பணியாளர் மற்றும் மாணவர்கள் எண்ணிக்கை

சாலை போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கிளை நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு:—

| வ. எண் | விபரம் | அலுவலர்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சாலை போக்குவரத்து நிறுவனம், சென்னை | *29 | – |
| 2. | ஓட்டுநர் பயிற்சி பிரிவு, கும்மிடிபூண்டி | *16 | – |
| 3. | ஓட்டுநர் பயிற்சி பிரிவு, திருச்சி | *1 | – |
| 4. | சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி, ஈரோடு | 140 | 1448 |
| 5. | சாலை போக்குவரத்து நிறுவன தொழில்நுட்ப கல்லூரி, குரோம்பேட்டை | 28 | 606 |
| 6. | சாலை போக்குவரத்து நிறுவன தொழில்நுட்ப கல்லூரி, பர்கூர் | 27 | 572 |
| 7. | சாலை போக்குவரத்து நிறுவன தொழில்நுட்ப கல்லூரி, திருநெல்வேலி | 36 | 571 |
| | **மொத்தம்** | **277** | **3197** |

*** அலுவலர்களின் எண்ணிக்கை அயற்பணி அலுவலர்களையும் உள்ளடக்கியது.**

## அத்தியாயம்–15

## தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை

**15.1** தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுத்துறை வாகனங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் 20 அரசு தானியங்கி பணிமனைகளையும், அவைகளின் செயல்பாடுகளை முறையாக கண்காணித்து, நடைமுறைப்படுத்த மூன்று மண்டல துணை இயக்ககங்களையும் உள்ளடக்கி, இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு, மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயங்கி வருகிறது.

### 15.2 அரசு மத்திய தானியங்கிப் பணிமனை

பொதுமேலாளர் அலுவலகம், அரசு மத்திய தானியங்கிப் பணிமனை, சென்னை பொதுமேலாளர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகிறது. இப்பணிமனையில் மாண்புமிகு தமிழக முதல்வர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு வாகனங்கள் உடனுக்குடன் பழுது நிவர்த்தி மற்றும் சென்னை மாநகரத்தில் இயங்கி வரும் நவீன ரக வாகனங்களை பழுது நீக்க / பராமரிக்க நவீனமயமாக்கப்பட்ட புதிய இயந்திரங்களைக் கொண்டு வாகனங்களின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய தொழில் நுட்பம், எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பு போன்றவற்றினை கருத்திற்கொண்டு அரசு துறைக்கு புதிய தலைமுறை வாகனங்கள் கொள்முதல்

செய்யப்படுகின்றன. அவ்வாகனங்கள் அரசு மத்திய தானியங்கி பணிமனையில் பராமரிப்பு செய்யப்படுகின்றன.

## 15.3 மாவட்டங்களில் உள்ள அரசு பணிமனைகள்

திருச்சி, மதுரை மற்றும் சேலத்தில் மண்டல துணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் மூன்று அரசு தானியங்கி பணிமனைகள் இயங்கி வருகின்றன. மற்ற சார்நிலை அலுவலகங்கள் கோவை, வேலூர், தருமபுரி, நாகர்கோவில், கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள் தானியங்கி பொறியாளர் கட்டுப்பாட்டிலும், தூத்துக்குடி, விழுப்புரம், உதகமண்டலம், விருதுநகர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள் பொது முதலாள் / தொழில் நுட்ப உதவியாளரின் கட்டுபாட்டின் கீழும் இயங்கி வருகின்றன.

## 15.4 வாகனங்கள் பராமரித்தல்

சுமார் **22,687** அரசுத்துறை வாகனங்களை இத்துறை பராமரித்து வருகிறது. முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசுச் செயலர்களின் வாகனங்களுக்கான சிறுசிறு பழுதுகளை நீக்க சுத்திகரிப்புப் பணிகளை கவனிப்பதற்காக, சென்னையில் தலைமைச் செயலகத்தின் அருகில் சுத்திகரிப்பு பணி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அரசுத்துறை ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக இத்துறையின் பல்வேறு பணிமனைகளில்

மொத்தம் 10 எரிபொருள் கிடங்குகளும் இயக்கப்பட்டு வருகின்றன. 2019–2020–ஆம் நிதியாண்டில் (31.01.2020 வரை), இத்துறையின் மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 23,504 ஆகும்.

## 15.5 இத்துறையின் பிற நடவடிக்கைகள்

அரசுத் துறை ஊர்திகளுக்கான தரமான பராமரிப்பு பணிகளை சிக்கனமான செலவில் திறம்பட அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். கழிவு செய்யப்பட்ட அரசு துறைகளுக்கு சொந்தமான வாகனங்களை மின்னணு தொழில்நுட்ப முறையில் திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி (M/s. MSTC) நிறுவனத்தின் மூலம் ஏலமிட அரசால் 2019-ஆம் ஆண்டில் ஆணையிடப்பட்டுள்ளது. நீதித்துறை, வனத்துறை, காவல்துறை மற்றும் வருவாய்துறை ஆகிய அரசு துறைகளால் பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை நடைமுறையிலுள்ள அரசு ஆணைகளின்படி ஆய்வு, மதிப்பீடு மற்றும் கழிவு செய்யப்படுகின்றன.

## 15.6 அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம்

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் சட்டபேரவை 2016–2017–ஆம் ஆண்டு அறிவிப்புகளின்படி மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் திருச்சி, சேலம் மற்றும் மதுரை ஆகிய அரசு தானியங்கிப் பணிமனைகளில் அரசுத்துறை ஓட்டுநர்களின் பணித்திறமையை மேம்படுத்தவும் மற்றும் அனைத்து

அரசுத் துறைகளில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கும் புத்துணர்ச்சி பயிற்சி, அவ்வப்போது அளிக்கும் பொருட்டு “அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம்” தொடங்கி சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

## 15.7 அம்மா அரசு நடமாடும் பணிமனை

அரசு தானியங்கி பணிமனை இல்லாத பிற மாவட்டங்களில் இயக்கப்படும் அரசு துறை ஊர்திகள் அருகில் உள்ள அரசு தானியங்கிப் பணிமனைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதற்கான எரிபொருள் செலவினை தவிர்க்கும் பொருட்டும், கால விரயத்தினை தவிர்க்கும் பொருட்டும் தேவையான ஆய்வு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அம்மா அரசு நடமாடும் பணிமனை முன்னோட்ட அடிப்படையில் திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் ஏற்படுத்திட மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்ற போரவையில் **03.07.2018** அன்று அறிவிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **29.01.2020** அன்று துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

## 15. 8 கணினிமயமாக்குதல்

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் **16.07.2019** அன்று மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் இயக்குநரக செயல்பாடுகள் மற்றும் அரசு

தானியங்கி பணிமனைகளை அரசு மின்னணு நிர்வாக முகமையின் மூலம் கணினிமயமாக்குதல் தொடர்பாக ரூபாய் 2 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என அறிவித்துள்ளார். இத்திட்டத்திற்கு, ரூபாய் 1.4643 கோடியினை அரசு வழங்கியுள்ளது. மேலும், கணினிமயமாக்குவதற்கு மென்பொருள் தேவைகளை மற்றும் விரிவான திட்ட அறிக்கையினை அரசு மின்னணு நிர்வாக முகமை நிறைவு செய்துள்ளது. மென்பொருள் உருவாக்குவதற்கும், வன்பொருள் மற்றும் இணைய தள சேவையினை பெறுவதற்கும் ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படும்.

### 15.9 பழுதுகள் கண்டறியும் கருவிகள் (Diagnostic Tools)

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 16.07.2019 அன்று மோட்டார் வாகன பராமரிப்புத் துறையில் புதிய நவீனரக வாகனங்களுக்கான பழுதுகள் கண்டறியும் கருவிகளை (Diagnostic Tools) சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலத்திலுள்ள அரசு தானியங்கி பணிமனைகளுக்கு ரூபாய் 15 லட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும் என அறிவித்துள்ளார். இத்திட்டத்திற்கு, ரூ.16.87 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 15.10 பயிற்சி

2019–2020–ம் ஆண்டில் (31.01.2020 வரை), 52 தொழில் நுட்ப பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

| வஎண் | பயிற்சி வழங்கிய நிறுவனத்தின் விபரம் | காலஅளவு | பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | போர்ஸ் மோட்டார்ஸ், கோயம்புத்தூர் | 26.09.2019 முதல் 28.09.2019 வரை | 12 |
| 2. | டாடா மோட்டார்ஸ், சென்னை | 03.10.2019 முதல் 04.10.2019 வரை | 20 |
| 3 | லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட், சென்னை | 21.11.2019 முதல் 23.11.2019 வரை | 6 |
| 4 | மஹிந்திரா & மஹிந்திரா, சென்னை | 26.12.2019 முதல் 28.12.2019 வரை | 14 |
| மொத்தம் | | | 52 |

## 15.11 2019–2020–ம் ஆண்டில் பயனற்றதென கழிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை

| வருடம் | கனரக மோட்டார் வாகனங்கள் | கார் | ஈப்பு | வேன் | மோட்டார் சைக்கிள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2019–2020 (31.01.2020 வரை) | 71 | 151 | 265 | 51 | 223 | 761 |

## அத்தியாயம் - 16

### முடிவுரை

பேருந்து, இரயில் மற்றும் விமானம் போன்ற பல்வேறு போக்குவரத்து முறைகள் மூலம் பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொதுப் போக்குவரத்தினை வழங்குவதை இத்துறை நோக்கமாக கொண்டுள்ளது. பேருந்து சேவையின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிய பேருந்துகள் வாங்குவதற்கு இத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், BS VI பேருந்துகளை வாங்குவதற்கு உத்தேசித்துள்ளது. இதன் மூலம் மாசு குறைவதுடன், எரிபொருள் சார்பினை அகற்றவும் முடியும். அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கும், அரசு பேருந்துச் சேவையினை பயனாளிகளுக்கு ஏதுவாக மாற்றுவதற்கு தகவல் தொழிற்நுட்பத்தை விரிவாக பயன்படுத்திட இத்துறை முடிவெடுத்துள்ளது. தடையற்ற பயணம் மேற்கொள்ளவும், முதல் மற்றும் கடைசி பகுதி வரை போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திடும் பொருட்டு பல்வேறு போக்குவரத்து முறைகளை இணைப்பதற்கு இத்துறை செயல்பட்டு வருகின்றது. பணிமனைகளை கட்டுதல், புதுபித்தல் மற்றும் நவீனமாக்குதல், புதிய தலைமுறை பேருந்துகளை வாங்குதல் போன்ற பேருந்து போக்குவரத்தினை அதிகரிக்கும் நடவடிக்கைகளானது ஒரு தொடர் முயற்சியாகும். பொதுப் போக்குவரத்தின் செயல்திறன், அவற்றின்

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல் போன்றவற்றின் மூலம் பொதுப் போக்குவரத்தினை வளர்ச்சியடைச் செய்யவும், அவற்றின் பங்களிப்பினை உயர்த்திடவும் அரசு கவனம் செலுத்தி வருகின்றது. இதற்கு அதிகப்படியான மற்றும் தொடர்ச்சியான நிதி உதவியும், பல்வேறு பிரிவினருக்கு பயணச் சலுகை வழங்குவதன் மூலம் அவர்களின் பயணம் எளிதாகும். எனவே, பொதுப் போக்குவரத்து உள்கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளில் அதிக முதலீடுகளை செய்து பேருந்து போக்குவரத்தினை உலக தரத்திற்கு உயர்த்திட தமிழக அரசு முனைந்துள்ளது.

**எம்.ஆர்.விஜயபாஸ்கர்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**

## இணைப்பு

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2020–2021

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச்செயலகம் | 1,690,62,59 | 192,00,07 | 768,10,00 | 2,650,72,66 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 65,53,36 | – | – | 65,53,36 |
| | **மொத்தம்** | **1,756,15,95** | **192,00,07** | **768,10,00** | **2,716,26,02** |